# சுயமரியாதை
# Suyamariyathai

தமிழ் மாத இதழ் Tamil monthly magazine

இதழ் - 001
சித்திரை 2017
£1.00

Reading is the KEY to learning

www.suyamariyathai.com



வீழ்ந்துகிடக்கும் வடக்கு கிழக்கை தூக்கிவிடுவதில் தமிழ் டயஸ்போறாவிற்கு பெரும் பங்குண்டு...



மட்டக்களப்பு மாவட்ட இனப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த நல்லாட்சி அரசாங்கம் செயற்படுகிறது...



தமிழக அரசின் உதவிகளின்றி வெளி மாநிலத்தில் 27 வருடங்களாக 5300 மாணவர்களுக்கு கல்வி ...



வடமாகாண ஆசிரிய நியமனம்: செவிடன் காதில் ஊதிய சங்கா..?

திண்ணிய நெஞ்சம் வேண்டும்! தெளிந்த நல்லறிவு வேண்டும்!

'உனக்குப் பெருமை

வேண்டுமானாலும்

உற்சாகம் வேண்டுமானாலும்,

பிற மனிதனுக்குத்

தொண்டு செய்வதில்

போட்டி போடுவதன் மூலம்

தேடிக்கொள்'

சுயமரியாதை வெளியீடு
**Suyamariyathai Publications ltd**
174 Waverley Road,Harrow, Middlesex, HA2 9RE
UNITED KINGDOM
www.suyamariyathai.com
editor@suyamariyathai.com
0044(0)20 33 71 71 71

| உள்ளே... | பக்கம் |
|---|---|
| 01. நோக்கம் | 04 |
| 02. வாழ்த்துச் செய்திகள் | 05 |
| 03. நல்லாட்சியிலும் எம் மக்கள் எதிர்நோக்கும் புதிய பிரச்சனைகள் | 06 |
| 04. பலத்தைக் காட்டுவோம் பலவீனத்தையல்ல | 09 |
| 05. வடக்கு கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதில் தமிழ் டயஸ்போராவின் வகிபங்கு.? | 11 |
| 06. வட–கிழக்கு இணைவும், தமிழ் – முஸ்லிம் உறவும்... | 14 |
| 07. இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலும் வாழ்வாதாரமும் | 17 |
| 08. இரு மொழி பேசும் ஒரு இலங்கையர்களை உருவாக்குவோம் | 21 |
| 09. பாடசாலை நூலகங்களும் எமது சமுகத்தின் வாசிப்புத் திறனும் | 23 |
| 10. கவியரங்கு | 25 |
| 11. செவ்வருத்தம் பூவே | 26 |
| 12. ஈழம் வேண்டுமடி கிளியே | 27 |
| 13. பொம்மை | 28 |
| 14. தமிழ் வளம் | 29 |
| 15. 1986 தலவாக்கலை பேரெழுச்சி | 33 |
| 16. மறு அவ"தாரம்" – சிறுகதை | 35 |
| 17. இந்திராகாந்தி சர்வதேச பாடசாலை பெங்களுரு | 38 |
| 18. The role of the Temple in post war social and economic Development | 41 |
| 19. வடமாகாண ஆசிரிய நியமனம் | 49 |
| 20. சுயமரியாதை, எமது வரலாற்றின் சாராம்சத்தினைத் தொடரும் சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் | 52 |
| 21. சமுக அளவியல்: மெய்யது விளம்பேல் | 55 |

# நோக்கம்

அன்புத்தமிழ் உறவுகளே,



நமது பால்யபருவத்திலே (1983இல்) ஏற்பட்ட மனவேதனையை தந்த சம்பவமானது உயிர்களையும் உடமைகளையும் இழந்து சொந்த மண்ணிலே துவண்டது உலக வரலாற்றுப் பதிவு. இலங்கைத் திருநாட்டின் சமுகங்களுக்கிடையான முரண்பாட்டினை வல்லாதிக்க சக்திகள் உசுப்பேத்தியாகலாம்.

'சமதர்ம தமிழீழம்' நோக்கிய புரட்சிகர சிந்தனைக்கு 17 வயதில் என்னையும் உள்வாங்கி. இந்தியாவிலிருந்து (1984) சிரியா. லெபனான். பாலஸ்தீனம். துருக்கி. குருதுஜ்தான் வரை தேசிய இனவிடுதலை பயணத்திலிருந்து சமுகமுரண்பாட்டின் வடிவங்களையும் அழகிய உலகை அழிக்கும் சக்திகளுக்கு துணைபோய்விட்டோம் என்ற வெட்கத்துடன். எங்களை நாங்களே அழித்துவிட்டோம். இன்று இவர்களிடமிருந்து எம்மோடு எஞ்சியவர்களையும் காப்பாற்ற வேண்டிய கடமை எமக்குண்டு.

மனிதன் தாயின் கற்பப்பையிலும், சவக்குழியிலும் இருக்கும் போதுதான் தவறு செய்யாமலிருக்கிறான். 2009இல் முடிந்த அத்தியாயத்திலிருந்து புதிய அத்தியாயத்தை ஆரப்பித்து இன்று எங்கள் உள்ளத்திலிருந்து உணர்வோடு நற்கல்வியை ஊட்டி, புதிய பாதையில் சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும் எமது பேரப்பிள்ளைகள் வாழவேண்டும். அதற்கான விதையினை விதைப்பதற்கான தருணத்தை நாம் தவறவிட்டால் மீண்டும் ஒரு வரலாற்றுத்தவறு நடப்பதற்கு உடந்தையாகிவிடுவோம். வெட்கமும், அவமானமும், விரக்தியும் ஒருபுறமிருக்கட்டும். வருடாவருடம் பட்டியலோ நீண்டு கொண்டே செல்கிறது.

இறந்தவர்களின் பெயர்களை வெளிப்படையாக உரியவர்களுக்கு பொறுப்புமிக்கவர்கள் அறிவிக்க வேண்டும். உறவுகளின் கண்ணீருக்கு உரிய பதில் கொடுத்தாக வேண்டும். நாங்கள் பாவத்தை சுமந்தபடியால் அதற்கான தண்டனைகளை அனுபவிக்க வேணடும். இறந்தவர்களை வேதனைப்படுத்திவிட வேண்டாம். அவர்களை விண்ணுக்கு அனுப்பிவிட்டோம். அவர்களை நெஞ்சில், நினைவில் நிறுத்தி., தொடர்ந்தும் மக்களுக்கான கடமையிலிருந்து தவறாது "மனிதம்" கொண்ட வீரப்பரம்பரையாகிய நாம் எஞ்சியகாலத்தை வாழப்பழகுவோம். எங்களை நம்பியுள்ள ஏனையவர்களையும் வாழ வைப்போம். உங்கள் கடைசிக் குழந்தையை நடுத்தெருவில் விட்டுவிடாதீர்கள். நிறையவே கோசங்கள், வேசங்கள் போட்டுவிட்டோம்.

தினம் தினம் செத்துக்கொண்டு இருப்பவர்களின் முனகல் சத்தம் எங்கோ ஒரு மூலையில் கேட்டவண்ணமுள்ளது. அது உங்கள் காதுக்கு கேட்கிறதா..? அல்லது, கேட்க விருப்பமில்லையா..? மனச்சாட்சியை, மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் எமக்கு அது இருக்கிறதா.? மானமுள்ள மனிதராய் வாழ வேண்டும். ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி 'வடிவங்கள்' மாறவேண்டும்.

புதியதோர் சமுகமாற்றத்திற்காக பகிர்ந்து வாழ்வோம். புதைந்ததும் வாழ்வதில் எது மிச்சம்.! பறவைகளில், காகத்தை பாருங்கள். ஒரு காகம் உணவு கிடைத்தவுடன் என்ன செய்கிறது.? ஒரு காகம் இறந்தவுடன் என்ன செய்கிறது.? அதையே நாம் செய்ய வேண்டும். முடிந்தால் முயற்சி செய்யுங்கள். இன்றேல் மற்றவர்களைச் செய்யவிடுங்கள். சமுகத்தின் மத்தியில் மாற்றமேற்பட இணையட்டும் உங்கள் கரங்கள். ஒளிமயமான வாழ்வுக்கு வழியமைப்போம்.

எமது மக்கள் கௌரவத்துடனும், தன் நம்பிக்கையுடனும் வாழ எமது அனைத்து வளங்களையும் வழங்குவதற்கான பொறிமுறையினை உருவாக்குவோம்.

நன்றி

சிவசம்பு சிவராஜா (சிவா)
siva@suyamariyathai.com

# Tamil Information Centre

தமிழ் தகவல் நடுவம்



V.Varadakumar Executive secretary

*We want to extend our appreciation for talking the time and effort, in bringing out the journal "Suyamariyathai", which intends to focus on historical, socio-political, cultural, economic and social justice issues relating to Ilankai Tamil speaking people.*

*We know how challenging is to produce interesting and balance publications, it takes huge effort to publish high quality and timely articles for the readers.*
*We look forward to your papers and making the new journal a great success.!*



## Message From former Mayor Councillor

**London Baba - Suresh Krishna** B.A, D.Hon. London Borough of Harrow

*It gives me tremendous pleasure to extend my greeting for the inaugural function of Suyamariyathai Publication, it is Commendable that Suyamariyathai Publication is the first magazine for Tamil communities in United Kingdom with both Tamil and English languages, this Magazine will undoubtedly foster the younger generation in Great Britain.*

# நல்லாட்சியிலும் எம் மக்கள் எதிர் நோக்கும் புதிய பிரச்சனைகள்



**சதாசிவம் வியாழேந்திரன் (அமல்)** - *பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை*

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் திகதி ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தினை, ஆட்சிக்கு கொண்டுவருவதில் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் மலையக மக்கள் மற்றும் இந்த நாட்டில் இனவாதத்தினை விரும்பாத பெரும்பான்மையானவர்களின் பங்களிப்பாக காணப்பட்டது. இலங்கையில் சிங்கள மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் மகிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது சிறிய அளவிலான வித்தியாசங்களிலேயே மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு வாக்குகள் கிடைத்தது. ஆனால் மைத்திரிபால சிறிசேனா ஆட்சிக்கு வருவதற்கு அதிகமான வாக்குகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களே வழங்கி இருந்தனர். இந்த நல்லாட்சி வந்தால், தமிழ் மக்கள் தங்களுக்கு உடனடியாக தீர்க்கப்படும் என பல பிரச்சனைகளை எதிர்பாத்திருந்தார்கள். முதலாவதாக காணிகள் விடுவிக்கப்படும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு கிடைக்கும், தொழிற்சாலைகள் உருவாக்கப்படும், வாழ்வாதார திட்டங்கள் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போது இவை எதுவும் முழுமை பெறாத நிலையில் மாறாக எமது மக்கள் இந்த நல்லாட்சியில் புதிய புதிய பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள்.

1. கடந்த ஆட்சியில் நடந்தது போன்று இந்த நல்லாட்சியிலும் திட்டமிட்ட குடியேற்றங்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்கையாக இனப்பரம்பலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் கடந்த ஆட்சியில் திருகோணமலை மற்றும் அம்பாறையில் இடம்பெற்றது போன்ற குடியேற்றங்கள் இந் நல்லாட்சியிலும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிட்டு குடியேற்றச் செயற்பாடுகளை செயற்படுத்துகின்றார்கள் குறிப்பாக மாதவணை, மையத்தனமடு போன்ற பகுதிகளில் அண்மைக்காலத்தில் பல்லாயிரக்கணக்கான மரங்கள் அழிக்கப்பட்டு திடீர் என முளைத்த குடியேற்றங்கள். மட்டக்களப்பில் ஆங்காங்கே ஏற்படுத்தப்படும் குடியேற்றங்கள். மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகபிரிவிற்குட்பட்ட கெவிளியாமடு எனும் கிராமம் தமிழ் மக்கள் வாழும் பாரம்பரிய தமிழ் எல்லைப்புற கிராமம் இங்கு காணப்படும் மேச்சல் காணிகளுக்குள் அத்துமீறி நூழைந்து பயிர்செய்கை என்ற பெயரில் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு எத்தனிக்கின்றார்கள்.

2. தமிழ் மக்களுடைய வணக்க ஸ்தலங்கள் திட்டமிட்ட முறையில் உடைக்கப்படுவது.

மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரைக்கும் கடந்த அரசாங்கத்திலே நடந்ததான மத தலைவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், இழிவுபடுத்தும் செயல்கள் இந்த அரசிலும் தொடர்வதை நாங்கள் பார்க்கின்றோம். குறிப்பாக 2015ம் ஆண்டு 10 மாதம் 23ம் திகதி மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயகத்திற்குட்பட்ட குருக்கள்மடத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்தில் புனித ஸ்தலங்கள் உடைக்கப்பட்டு வீதிகளில் வீசி எறியப்பட்டு, விக்ரகங்கள் கிணற்றினுள் போடப்பட்டது. அதே போன்று 2016ஆம் ஆண்டு வாகனேரி இத்தியடிப்பிள்ளையார் தொடர்ந்து ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் இருதடவைகள் உடைக்கப்பட்டதுடன் பன்றி, ஆமை இறைச்சிகள் வீசப்பட்டுமிருந்தன. அதுமட்டுமன்றி அவ்வாலய மதகுருவினுடைய ஆடைகள் தீக்கரையாக்கப்பட்டு அங்கிருந்த புனித சின்னமான சிவலிங்கம் உடைத்து வீசி எறியப்பட்டது. அதைத் தொடர்ந்து பொலன்னறுவை பிரதான



வீதியில் இருக்கின்றதான வாகனேரி நேசரடிப்பிள்ளையார் அந்த ஆலயமும் உடைக்கப்பட்டிருந்தது அங்கிருந்த பிள்ளையார் சிலை கூட வீசி எறியப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக மட்டு மாநகருக்குள் அமைந்துள்ள சத்துருக்கொண்டான் கண்ணகி அம்மன் ஆலயமும் இதே போன்று சேதமாக்கப்பட்டிருந்தது. மேலும் கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலையடித்தோனா கிராமசேவகர் பிரிவில் உள்ள கடலூர் கிராமத்தில் இருந்த நாககன்னி ஆலயங்கூட தீக்கிரையாக்கப்பட்டது. கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிண்ணையடி கிராமத்தில் ஒரே நேரத்தில் மூன்று கோவில்கள் சேதமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆலயங்களினுடைய உண்டியல்கள் அது சம்மந்தப்பட்ட பொருட்கள் சேதமாக்கப்பட்டு தூக்கி எறியப்பட்டுள்ளது. குறிப்பாக கிண்ணையடி மாணிக்கப்பிள்ளையார் கோயில் உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் களவாடப்படதுடன் கோயில் புனித விக்கிரகங்கள் கூட தூக்கி வீசப்பட்டுள்ளது. அது மாத்திரன்றி கிண்ணையடியில் உள்ள மகா விஷ்னு ஆலயத்திலும் இதே போன்று உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் களவாடப்பட்டதோடு ஆலய பூசகரின் உடைமைகள் சேதமாக்கப்பட்டு அவரது ஆடைகள் கூட கிழித்து வீசப்பட்டிருந்தது. அத்தோடு கிண்ணையடியில் அமைந்துள்ள ஶ்ரீ நாகதம்பிரான் ஆலயத்திலும் உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணங்களும் களவாடப்பட்டுள்ளது. பொதுவாக சுமார் 10க்கும் அதிகமான இந்து ஆலயங்கள் இந்த இரண்டு வருடங்களுக்குள் சேதமாக்கப்பட்டுள்ளது..

3. மட்டக்களப்பு மாவட்டத்தில் திடீர் திடீர் என்ற பௌத்த மயமாக்கலை செயற்படுத்துவது…

மட்டக்களப்பில் உள்ள மங்களராமய விஹாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரர், மாவட்டத்தின் பல இடங்களில் குறிப்பாக செங்கலடி, பங்குடாவெளியில் உள்ள தனியார் காணிக்குள் அடாத்தாக நுழைந்து அங்குள்ள அரச மரத்தடியில் பௌத்த மத அடையாளங்கள் காணப்படுவதாகவும் கடந்த காலங்களில் இங்கு பௌத்த வழிபாட்டுத் தலம் அமைந்திருந்ததாகவும் கூறி அங்கு புத்தர் சிலையொன்றினை நிறுவ முற்பட்டதும் தற்போது 2015ம் ஆண்டிற்குப் பிறகு குறிப்பாக மாதவண, மையத்தனமடு போன்ற பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்களில் அவர்கள் குடியேறுவதிலோ அல்லது பௌத்த



விகாரைகள் அமைப்பதிலோ நாம் எதுவித தடையினையும் இடவில்லை. ஆனால், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் புதிதாக விகாரைகளை அமைப்பது நல்லிணக்கத்தை குழப்பும் செயற்பாடாகவே அமைகின்றது.

4. நல்லாட்சியிலும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது…

இலங்கையில் இருவரை 1985ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 43 ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் தாக்கப்பட்டுமுள்ளார்கள். ஜெ.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் ஒருவரும், ஆர்.பிரமதாசஷ மற்றும் சந்திரிக்கா பண்டாரணாயக்கா ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் 16 ஊடகவியலாளர்களும், மகிந்தராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 26 ஊடகவியலாளர்களும் சுட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 35 தமிழ் ஊடகவியலாளர்கள், 5 சிங்கள ஊடகவியலாளர்கள், 3 முஸ்லிம் ஊடகவியலார்களும் சுட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த நல்லாட்சிக்குப் பின்னர், ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்பட மாட்டார்கள் என எதிர்பார்த்தோம். ஆனால் ஆங்காங்கே ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு வருகின்றார்கள். குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் 22.03.2017ஆம் திகதியன்று இரண்டு சுயாதீன ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க சென்ற வேளையில் அடித்து துரத்தப்பட்டதுன் மூலமாக ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது.

5. முடக்கப்பட்டு கிடக்கின்ற தொழிற்சாலைகள் மீண்டும் செயற்பாட்டிற்கு கொண்டுவர முடியும் எதிர்பார்ப்பு புறக்கணிக்கப்பட்டு வருவது…

உதாரணமாக மட்டக்களப்பில் முடப்பட்டு காணப்படும் வாழைச்சேனை காகித ஆலை, ஓட்டுத் தொழிற்சாலை ஆகியன நல்லாட்சியில் திறக்கப்படுவதன் ஊடாக பலருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். இவற்றின் மூலம் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரமும் உயர்த்தப்படும் என்ற பல எதிர்பார்ப்புகளுடன் நாங்கள் இருந்தோம் ஆனால் இங்கு பழைய தொழிற்சாலைகள் புணரமைக்கப்படவும் இல்லை, திறக்கப்படவும் இல்லை, மாறாக இங்கு திறக்கப்படவுள்ள தொழிற்சாலை மதுபான உற்பத்திச்சாலை.

சனத்தொகையின் வீதாசாரத்திற்கு ஏற்ப மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 மதுபானசாலைகள் தான் இருக்க வேண்டும் ஆனால் தற்போது 53 மதுபானசாலைகள் அமைக்கப்பட்டு இலங்கையிலேயே மதுபானசாலைகள் அதிகமாக உள்ள மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலின் போது, "போதை அற்ற நாட்டை கட்டியெழுப்புவோம்" என்றே இந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. நல்லாட்சி அரசாங்கம் பொறுப்பெற்ற சரியாக 5 மாதங்களில் 2015ம் ஆண்டு மே மாதம் நிதியமைச்சிற்கு கீழ் இயங்கி வரும் முக்கியமான கலால் திணைக்களம் உட்பட இரண்டு திணைக்களகங்களால், மட்டக்களப்பு கல்குடாவில் "மதுபான உற்பத்திச்சாலைக்கான அனுமதியினை இதே அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் நிதிமோசடியில் பேசப்படும் அர்ஜீன் மகேந்திரனின் மருமகன் அலோசியஸ் மகேந்திரன் 450 கோடி ரூபாய் செலவில் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகளின் தடை உத்தரவினையும் தாண்டி இவ்உற்பத்தி சாலையினை நிர்மாணித்து வருகின்றார்கள்.

6. 2015ம் ஆண்டு 8வது பாராளுமன்றத்தில், 10 இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களால் வாக்குறுதி முன்வைக்கப்பட்டது…



ஆனால் இதுவரை 10 இலட்சத்தில் 1 இலட்சம் வேலைவாய்ப்புக்கள் கூட வழங்கப்படவில்லை. தற்போது வேலையற்ற பட்டதாரிகள் கைக் குழந்தைகளுடனும், மகப்பெற்றுக் காலப்பகுதியிலும் கூட வெயிலிலும், மழையிலும், பனியிலும் இரவு பகலாக 30 நாட்களாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இதுவரை இவர்களுக்கான எந்தவொரு தீர்வுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

மக்கள் நல்லாட்சியை கொண்டு வரும் போது காலாகாலமாக இருந்த தங்களுடைய பிரச்சனைகளான அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற இவ்வாறான விடயங்களை கருத்திற்கொண்டே இந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு கொண்டு வரப்பட்டது. எதனை எதிர்பாத்து இந்த நல்லாட்சி அரசாங்கம் கொண்டுவரப்பட்டதோ அந்த விடயங்களுக்கான தீர்வு இன்றுவரை முழுமை பெறாத நிலையில் உதாரணமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களாலும் காணிகளை விடுவிக்க கோரியும் ஆங்காங்கே போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இவை ஒருபுறம் இருக்க தற்போது புதிய பிரச்சனைகள் எற்பட்டுள்ளது.

அடுத்த இதழில் தொடரும்…

# பலத்தை காட்டுவோம் பலவீனத்தையல்ல.!

- ஈழமாறன் -

மீண்டும் ஒருமுறை ஐ.நாவில் ஈழத்தமிழர் பிரச்சனை அலசப்பட்டுக்கொண்டிருக்கும் இச் சமயத்தில், புலத்திலும்-புலம்பெயர் நாடுகளிலும் வெளிவரும் விடயங்கள் ஈழத்தமிழரை குழப்பத்திலும் வெறுப்பிலும் ஆழ்த்தி அவஸ்தைப் பட வைக்கின்றன.

* 13, வடகிழக்கு இணைப்பு எல்லாம் அன்றைய காலகட்டத்தில் தேவையானதாக இருந்தது. இன்று இந்த அரசு நிறைவேற்ற இருக்கும் அதிகாரப் பரவலை ஏற்று, மேற்கொண்டு முன்னேறுவதுதான் நன்று
*அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறச் செயலர் கூறிய அறிவுரை இது.



"ஆட்சி மாறினாலும் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் ஈழத்தமிழர் பிரச்சனையில் எந்த வித மாற்றமுமில்லை" இது அமெரிக்கா குழுவின் வெளிப்பாடு.

"இலங்கை அரசு பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எனவே G.S.P+ I மீண்டும் அளிக்க தீர்மானம் எடுக்க உள்ளோம்".இது ஐரோப்பிய ஒன்றியத்தின் கணிப்பு.

"இந்த அரசு நல்லிணக்க விடயத்திலும்,மனித உரிமை மேம்பாட்டிலும் பல நல்ல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது". இது பல நாடுகள் தற்போது கூறிவரும் கூற்று. இதைத் தொடர்ந்து த.தே.கூட்டமைப்பின் தலைவர் திரு. இரா.சம்பந்தன் அவர்களின் 2 மணிநேர நாடாளுமன்ற உரை இருந்தது.

ஆனால் இன்னும் புலத்தில்,
"எழுக தமிழ் என எடுக்கும் பேரணி"
"சுமந்திரன் மீது கொலை முயற்சி"
"த.தே.கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டது.
தேர்தல் வாக்குறுதிகளான சமஷ்டி மற்றும் வடகிழக்கு இணைப்பை கைவிட்டு அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்தாசை செய்கின்றது". இது புலத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் த.தே.கூட்டமைப்பிற்கு எதிரானவர்களின் விமர்சனங்கள்.

இலங்கையில் 70 ஆண்டுகளாக புரையோடிப்போன இனப்பிரச்சனைக்கு தீர்வு காணவென இன்றைய இலங்கையரசின்– கடந்த 2 வருடங்களாக புதிய அரசியல் யாப்பு வரும் வரும் என காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது. ஐ.நாவில் கால அவகாசம் வேண்டி,அரசு முழுப்பலத்தையும் பாவித்து முயற்சி செய்கின்றது.

யுத்த குற்ற விசாரணை பற்றி ஐ.நா வின் தீர்மானத்திற்கு முரணாக, ஜனாதிபதி உட்பட முக்கிய தலைவர்கள் கருத்து வெளியிட்டபடி உள்ளனர். இவற்றையெல்லாம் தொகுத்து பார்க்கும் போது ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்குமா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும்.

ஜனவரி 2015ல் தமிழ் பேசும் மக்களின் வாக்குப் பலத்தால் ஆட்சிக்கு வந்த இலங்கை அரசின் ஜனாதிபதி, அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் மூலமும் அவர்கள் முக்கியமாக உள்வாங்கி இருக்க வேண்டிய செய்தியை இந்த அரசு உள்வாங்க மறந்து விட்டது.

இந்த நாட்டில்,சகல இன மக்களும் சமமாக வாழவும்–அந்தந்த இனங்கள் பூர்வீகமாக வாழும் இடங்களில் அவர்கள் தம்மைத்தாமே ஆளும் வகையில் கூடிய அதிகாரப் பரவலாக்கம் செய்து, யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு லட்சக்கணக்கான உயிர்களை காவு கொடுத்து இருப்பிடங்களை இழந்து அல்லலுறும் தமிழ் பேசும் உறவுகளை அவரவர் இடங்களில் மீளக் குடியமர்த்தி, அவர் தம் வாழ்வாதாரங்களை வளம்படுத்தி, காணாமல் போகப்படுத்தப்பட்ட உறவுகளின் நிலைமையை தெளிவுபடுத்தி,இராணுவம் மூலை முடுக்கெல்லாம் நிலை கொண்டிருப்பதை மீளப் பெற்று–பிரதான முகாம்களுக்குள் மட்டும் முடக்கி,சிவில் சமூக வர்த்தக நடவடிக்கைகளில் இராணுவத் தலையீட்டை ஒழித்து,யுத்த குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுத்து மிக வெளிப்படையாகவே தெரியும் யுத்த மீறல்களுக்குரிய தண்டனைகளை வழங்கி –இவ்வாறெல்லாம் செய்ய வேண்டியவற்றை செய்து உண்மையிலேயே "நல்லாட்சி அரசு" என்ற பெயர் வாங்குவதை விடுத்து இன்றைய இலங்கையரசு ஒரு தடுமாற்றப் பாதையில் போய்க்கொண்டிருக்கின்றது.

நாட்டின் சுபீட்சத்திற்கும் மக்களின் நலனுக்கும் அரசியல் செய்ய எவருக்கும் அக்கறையில்லையென்பதை திரு.சம்பந்தன் அவர்களின் நீண்ட உரை எடுத்துக் காட்டியுள்ளது.

எமது தரப்பிலும் குறைகள் இல்லாமல் இல்லை. ஒரு பாரிய இன அழிப்பை சந்தித்த இனமாக நாம் இருப்பதாக தெரியவில்லை. வர்த்தக நலன் சார்ந்த பூகோள அரசியலுக் கூடாக எமது கோரிக்கைகளை வென்றெடுக்க நாம் இலக்கை நோக்கிப் பயணிப்பவர்களாக தெரியவில்லை. முரண்பட்ட இலக்குகள்,உணர்ச்சி பூர்வமான பேச்சுக்கள் –கோஷங்கள், ஈழத்தமிழரின் பலத்தை காட்ட வேண்டிய இன்றைய சூழலில் பலவீனத்தை காட்டி நிற்பது, தத்தமது அமைப்புக்களின் முனைப்பைக் காட்ட எண்ணி ஒட்டு மொத்த தமிழினத்தின் விடிவை கேள்விக் குறியாக்குவது, எம்மிடையேயுள்ள இந்த இழுபறிகள் எதிரிகளின் நிகழ்ச்சி நிரலை இலகுவாக்கிறென்பதை உணராமல் இருப்பது இவையெல்லாம் விடுதலைப் பாதையில் பயணிக்கும் எம்மினத்திற்கு ஏற்புடையதல்ல.

அகிம்சையில் கால் நூற்றாண்டுக்கு மேல் விரக்தியுற்று, ஆயுதமேந்தி போராடினோம்.அதன்போது பூகோள அரசியலைப் புறந்தள்ளி அரசியல் சிந்தனைகளை அறவே ஒதுக்கி அழிவுக்கு வழிவகுத்தோம்.

70 ஆண்டுகளாக நடந்து வந்த அரசியல் மற்றும் ஆயுதப் போராட்ட வரலாற்று காலத்தில் வாழ்ந்து அதில் ஈடுபட்ட வலி சுமந்து அனுபவப்பட்டவர்கள் இன்னும் வாழ்கின்றனர். அடுத்த தலைமுறையினர் இந்த போராட்டத்தை எந்தளவுக்கு எடுத்துச் செல்வார்கள் என்பது எதிர்பார்க்க முடியாத ஒன்று. எனவே அந்த வலிசுமந்த மூத்த தலைமுறையினர் இருக்கின்ற போதே எமது இனத்தின் பிரச்சனைக்கான இறுதித் தீர்வை எட்டுவதே வருங்கால சந்ததிக்கு நாம் செய்யும் நற்பணி.அடுத்த தலைமுறைக்கு இது தொடருமானால் சிங்கள பேரினவாத ஆட்சியின் நிகழ்ச்சி நிரலில் எமக்கான தீர்வு என்பது நீர்த்து போய்விடும். எனவே இன்றைய தேவை ஒன்றுபட்ட குரலில் ஒரு அணியாக நின்று ஒரு நிரந்தர தீர்வு என்ற இலக்கை நோக்கிப் பயணிப்பதே!

# வடக்கு கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதில் தமிழ் டயஸ்போறாவின் வகிபங்கு?



*யதீந்திரா – இலங்கை*

தமிழ்ச் சூழலில் அரசியலுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தில் ஒரு சிறுபகுதி கூட, அபிவிருத்திக்கு கொடுக்கப்படுவதில்லை. தமிழ் மக்களின் உரிமைசார் அரசியல் எந்தளவிற்கு முக்கியமானதோ, அந்தளவிற்கு முக்கியம், யுத்தத்தால் உருக்குலைக்கப்பட்ட தமிழ் மக்களின் பொருண்மியத்தை வலுப்படுத்த வேண்டியதும். ஆனால் தமிழ்ச் சூழலில் இது தொடர்பில் மிகக்குறைந்தளவிலேயே விவாதிக்கப்படுகிறது. வடக்கு கிழக்கை பொருண்மிய நிலையில் எவ்வாறு உயர்த்த முடியுமென்னும் கேள்வி எழுப்பினால் கூடவே, ஒரு கிளைக் கேள்வி எழலாம் அதாவது, அதற்கு புலம்பெயர் சமூகம் எவ்வாறு உதவ முடியும்?

தமிழ் டயஸ்போறா என்பது தவிர்க்க முடியாமல் ஈழத் தமிழ் சமூகத்தின் அனைத்து விடயங்களிலும் ஏதோவொரு வகையில் இரண்டறக்கலந்துவிட்டது. அதனை ஈழத் தமிழ் சமூகத்தின் பலமாக உருமாற்றறுவதில்தான் நமது வெற்றி தங்கியிருக்கிறது. யுத்த காலத்தில் தமிழ் டயஸ்போறா என்பது நோக்கப்பட்ட விதமும், யுத்தத்திற்கு பின்னர் அது நோக்கப்படும் விதமும் முற்றிலும் வேறானது. யுத்த காலத்தில் தமிழரின் ஆயுதப் போராட்டத்தை வெற்றிப்பாதை நோக்கி நகர்த்துவதொன்றே தமிழ் டயஸ்போறாவின் பிரதான இலக்காக இருந்தது. அதற்காக நிதி சேகரிப்பதே அதன் பிரதான பணியிலக்காகவும் இருந்தது. இதில் விதிவிலக்குகள் இருந்தன. ஆனால் ஒரு பெரும்போக்கு நான் குறிப்பிட்டவாறுதான் இருந்தது என்பதை ஏற்றுக்கொள்வதில் சிக்கல்கள் இருக்காது என்றே நம்புகிறேன்.

இவ்வாறானதொரு சூழலில்தான் யுத்தம் ஒரு முடிவுக்கு வந்தது. யுத்தத்தின் முடிவு, அதன் போதான அழிவுகள், அந்த அழிவுகள் தொடர்பில் பொறுப்புச் சொல்ல வேண்டிய



அரசின் கடப்பாடு என்பன தொடர்பில், தமிழ் டயஸ்போறாவின் மத்தியில் கடுமையான விசனங்கள் உண்டு. அது தவிர்க்க முடியாத ஒன்றும் கூட. ஆனால் இவற்றுக்கு மத்தியிலும் வீழ்ந்துகிடக்கும் வடக்கு கிழக்கை தூக்கிவிடுவதிலும் டயஸ்போறாவிற்கு பெரும் பங்குண்டு என்பதை எவரும் நிராகரிக்க முடியாது. இது தொடர்பில் ஒரு சிறு விவாதத்தை தூண்டுவதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும். அரசியல் பிரச்சினைகள் ஒரு முடிவுக்கு வராமல், இந்த விடயங்கள் தொடர்பில் விவாதிக்க முடியாது என்று கூறுபவர்களுடன் நான் முரண்படவில்லை. அது அவர்களது நிலைப்பாடாக இருப்பின் அதற்காக இயங்கும் உரிமை அவர்களுக்குண்டு. ஆனால் அரசியல் தொடர்பில் விவாதிக்கின்ற அதே நேரத்தில், எமது மக்களின் பொருண்மிய மேம்பாட்டிலும் நாம் கவனம்

செலுத்தமால் இருக்க முடியாதென்று உரைப்போர் தொடர்பிலேயே இக்கட்டுரை கரிசனை கொள்கிறது.

இவ்வாறு விவாதிக்கின்ற போது ஒரு கேள்வி எழலாம் அனைவருமே டயஸ்போறாவின் பங்களிப்பு பற்றி பேசுகின்றனர் - அப்படியானால் டயஸ்போறாவின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும்? தமிழ் டயஸ்போறா யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வழிகளிலும் உதவிக்கொண்டுதான் இருக்கிறது. இதனை பலரும் தனியாகவும் கூட்டாகவும் மேற்கொண்டு வருகின்றனர். அப்படியான உதவிகளுக்கு அப்பால் எவ்வாறு பயணிப்பது என்பதிலேயே இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது. வடக்கு கிழக்கு சூழலை பொறுத்தவரையில் (கிழக்கு இதில் அதிகம் கவனம் பெறுவதில்லை) தமிழ் மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்துதல் என்பதை இரண்டாகப் பிரித்து நோக்கலாம். ஒன்று, தமிழ் மக்களை சமூக நிலையில் வலுப்படுத்தும் சமூக நலத்திட்டங்களுக்கு உதவுதல் - இரண்டு, புலம்பெயர் முதலீடுகளை ஊக்குவித்தல்.

சமூகநலத் திட்டங்கள் என்பதன் கீழ் சமூக நலன்புரிச் சங்கங்களுக்கு உதவுவதிலிருந்து பின்தங்கிய பகுதிகளில் கல்வித் திட்டங்களுக்கு உதவிசெய்வது வரையில் அடங்கும். ஏனெனில் சமூகம் தனது அடிப்படைகள் அனைத்தையும் இழந்து எல்லாவற்றுக்கும் மற்றவர்களை எதிர்பார்க்கும் நிலையில் இருக்கிறது. அந்த நிலையை மாற்றியமைப்பதற்கு சமூகநலத் திட்டங்கள் இன்றியமையாதவை. இதனை வடக்கு கிழக்கிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட தமிழ் தன்னார்வ அமைப்புக்களை இனம்கண்டு அவர்களுக்கு ஊடாக செய்ய முடியும்.

அடுத்தது முதலீட்டுத் திட்டங்கள். தமிழ் டயஸ்போறாவின் முதலீட்டை ஊக்குவிப்பது என்பதும் இரண்டு வகையில் நோக்கப்பட வேண்டியதாகிறது. ஒன்று, மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான முதலீடுகள். உதாரணமாக விதவைகள், அல்லது பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் அவர்களால் முன்னெடுக்கப்படக் கூடிய சிறு தொழில் முயற்சிகளுக்கு உதவுதல். இது பல வகைப்படும். அவர்களது ஆர்வம், தொழில் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் இதனை தெரிவுசெய்ய முடியும். இது முதலீடாக இருப்பினும் இந்த முதலீட்டின் நன்மை முழுவதும் மக்களையே சென்றடையும்.

இதன் இரண்டாவது வகை முற்றிலும் வியாபார நோக்கம் கொண்டது. ஒரு வேளை இதனை வசதி வாய்ந்த டயஸ்போறா தமிழர்கள் விரும்பலாம். அதாவது இது முற்றிலும் இலாப நோக்கம் கொண்ட முதலீடுகள். உதாரணமாக கிழக்கு மாகாணம் சுற்றுலாத்துறைக்கு (Tourism) மிகவும் பிரபலமான இடம். முக்கியமாக திருகோணமலை பலரையும் ஈர்க்கும் இடம். இந்தப் பகுதிகளில் தமிழ் டயஸ்போறா உல்லாசத்துறையில் முதலீடு செய்ய முடியும். இதனால் பல தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை





வழங்க முடியும். அதே போன்று வடக்கு கிழக்கு பகுதிகளில் பெருமளவில் பண்ணைத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இதன் வாயிலாகவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பலருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும். சொத்துக்கள் டயஸ்போறாவிடம் இருக்கும் அதனை பராமரிக்கும் பொறுப்பு களத்திலுள்ளவர்களிடம் இருக்கும். இவ்வாறான பண்ணைத் திட்டங்களுக்கென அரச காணிகளை கோர முடியும். 33 வருடங்களுக்கு குத்தகையின் அடிப்படையில் காணிகளை பெறுவதற்கான ஏற்பாடுண்டு. டயஸ்போறாவிடம் இருக்கின்ற தொழில்சார் நிபுணத்துவத்தைக் கொண்டு இவ்வாறான திட்டங்களை சிறப்பாக மேற்கொள்ள முடியும். அதே போன்று மரக்கறி, கடல் உணவு ஏற்றுமதி போன்ற வியாபாரங்களிலும் ஈடுபட முடியும்.

நான் இது தொடர்பில் சிலருடன் பேசிய போது அவர்களிடம், தங்களின் முதலீட்டுக்கான பாதுகாப்பு தொடர்பில் கவலையிருப்பதை அவதானிக்க முடிந்தது. இது ஏற்றுக் கொள்ளக் கூடியதே! தற்போதிருக்கின்ற அரசாங்கம் தமிழ் டயஸ்போறாவை வரவேற்கிறது ஆனால் ஆட்சி மாறிவிட்டால் என்ன செய்வதென்று சிலர் யோசிக்கலாம். இதற்கும் ஒரு ஆலோசனையுண்டு. முதலீட்டுத் திட்டங்களை ஒரு கூட்டு முயற்சியாக (Join venture) மேற்கொள்ள முடியும். உதாரணமாக இந்தியாவிலுள்ள முதலீட்டாளர்களுடன் இணைந்து வடக்கு கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இந்தியா வடக்கு கிழக்கில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகிறது. தெற்கில் சீனா அதிகம் கால்பதித்து வருவதால் வடக்கு கிழக்கில் முக்கியமாக கிழக்கில் இந்தியா தனது முதலீட்டுத் திட்டங்களை அதிகரிக்க விரும்பலாம். இதே போன்று நீங்கள் வாழுகின்ற நாடுகளிலுள்ளவர்களையும் இணைத்துக் கொண்டு கூட்டு முதலீடுகளை மேற்கொள்ளலாம். இவ்வாறான முதலீடுகளும் தொழில்



துறைகளும் வளர்ச்சியடைகின்ற போது நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்னும் எண்ணம் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் ஏற்படாது.

இங்கு சில விடயங்களை, ஒரு உதாரணமாகவே எடுத்தாண்டிருக்கின்றேன். வடக்கு கிழக்கை பொருளாதார ரீதியில் எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பது தொடர்பில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் கூடி ஆராயும் போது, மேலும் சிறந்த திட்டங்களை நாம் கண்டடையலாம். ஆனால் தமிழ் டயஸ்போறா பொருளாதார ரீதியில் அதிகம் செய்ய முடியும் என்பதுதான் உண்மை. அதுதான் அதனது பலமும் கூட. அந்த உண்மையை நோக்கி ஆர்வமுள்ளவர்களை திருப்ப வேண்டியதும், அவ்வாறு ஆர்வம் கொள்பவர்களை களத்திலுள்ளவர்களுடன் இணைப்பதும்தான் தற்போதைக்கு செய்ய வேண்டியது. தமிழ் டயஸ்போறா என்பது ஒரு பலம் ஆனால் அது வினைத்திறனுடன் செயலாற்றினால் மட்டுமே அது பலமாக பரிணமிக்க முடியும்.

# வட- கிழக்கு இணைவும்; தமிழ் - முஸ்லிம் உறவும் .!



ஜனாத்தன் அல்ப்ரெட்

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்போ அல்லது பிரிவோ சட்டரீதியானதல்ல, அது இயற்கையானது; வெளிநாட்டு ஆட்சியாளர்களின் காலத்துக்கு முன்னர் இலங்கை மூன்று பிரிவுகளாக ஆட்சி செய்யப்பட்டமை நாம் எல்லோரும் அறிந்த வரலாறாகும்.

1829களில் கோல்புரூக்-கமரூன் அரசியல் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வடக்கு, கிழக்கு, மத்திய, தென், மேல் ஆகிய 5 மாகாணங்களாகப் பிரித்து நிர்வாக ஒழுங்குகளை முன்வைத்தார்கள், தொடர்ந்து 1845ல் வடமேல் மாகாணமும், 1873ல் வட மத்திய மாகாணமும், 1886ல் ஊவா மாகாணமும், 1889ல் சபரகமுவ மாகாணமும் நிறுவப்பட்டன.

இத்தகைய மாகாணங்களை பிரிக்கும் போது ஆங்கிலேயர் தங்களுடைய நிர்வாக மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காகவே வகுத்தார்கள் அன்றி, அந்தந்த மாகாணங்களில் வாழும் மக்களின் இன, மத, கலாசார வாழ்க்கை முறைகளைக் கருத்தில் கொண்டல்ல. இத்தகைய பிளவுபட்ட சமூகம் சுயமாகவே ஒன்றுபட்டு வாழ முன்வந்த போதே **"வடக்குக் கிழக்கு இணைக்கப்பட வேண்டும்"** என்ற கோரிக்கையானது தோற்றம் பெற்றது.



பிரித்தானியர் காலத்துக்கு காலம் கொண்டுவந்த அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பான சிபாரிசுகளில் கூட தமிழ் தலைவர்கள் இந்தக் கோரிக்கையினை முன்வைத்தார்கள். குறிப்பாக சுதந்திரத்தின் பின்னர் வந்த ஆட்சியாளர்களினால் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டு அதிகரிக்கப்பட்ட சிங்கள குடியேற்றங்கள், வளங்களின் அபகரிப்பு போன்ற விடயங்கள் வடக்கு கிழக்கு இணைப்பை பலப்படுத்தின.

இந்த ஆபத்தை அன்றைய சிறுபான்மையினது தலைவர்கள் முன் கூட்டியே நன்கு உணர்ந்திருந்தார்கள். கிழித்தெறியப்பட்ட **"பண்டா செல்வா"** ஒப்பந்தத்தில் வடக்கும், கிழக்கும் இணைக்கப்படல் வேண்டும் என்ற விடயத்தை உட்புகுத்தியிருந்தனர். தொடர்ந்தும் வலியுறுத்தியதன் விளைவாக 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்திலே வடக்கும் கிழக்கும்

இணைக்கப்படுதல் என்ற விடயம் முக்கியத்துவம் பெற்றது. இந்த இணைப்பு தமிழ் முஸ்லீம் மக்களின் பொதுசன அபிப்பிராயமாகவும் அமைந்து இருந்தது.



மறைந்த முஸ்லீம் காங்கிரசின் தலைவர் அஷ்ரப், "வடகிழக்கு இணைப்புத்தான் தமிழ் மக்களுடைய அபிலாசை என்றால்..! தென்கிழக்கு அலகு என்ற ஒன்று முஸ்லிம்களுக்காக வரையறுக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தாராம்." அந்த கொள்கை அப்போதிருந்த சூழ்நிலையில் யதார்த்தமாக தெரிந்த போதும் இன்று வடக்கும் கிழக்கும் பிரிந்திருக்கின்ற சூழ்நிலையில் தென்கிழக்கு அலகு என்கின்ற ஒன்று சாத்தியமா.? என்றே எண்ணத் தோன்றுகிறது.

அண்மைய பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தில் கூட "வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்குதல்" எனும் விடயம் சிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட வரவேற்பதாக தெரிவித்திருந்தது. அதில் வடக்கு- கிழக்கு இணைந்த தாயகத்தை உருவாக்குவது என்கிற நிலைப்பாட்டிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் என்றைக்கும் விலகவில்லை. எனினும், முஸ்லிம் மக்களின் தனித்துவம், இருப்பு, உரிமைகள் உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தது.

இருந்தாலும் முஸ்லீம் மக்களின் மத்தியில் இன்று விதைக்கப்பட்டுள்ள நிலத்தொடர்பற்ற "**முஸ்லீம் பிராந்திய அலகு**" அல்லது "**தென்கிழக்கு அதிகார அலகு**" எனும் கோரிக்கை நிச்சயம் தமிழர்களுக்கு கசப்பான விடயமாகவே இருக்கும். **"நிலத்தொடர்பற்ற முஸ்லிம் அலகு"** என்பது அஷ்ரபினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையாகையாக சொல்லப்படுகின்றது. அதில் அவர் 'அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பெரும்பான்மைத் தொகுதிகளை மையமாகக் கொண்டதாகவும் மட்டக்களப்பு, திருமலை, வன்னி மாவட்டங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு முஸ்லிம் அரசியல் அதிகார அலகு எமக்கு வேண்டும்' என்றும் கூறியிருந்ததாக இந்நாளில் குறிப்பிடப்படுகின்றது.

**"தென்கிழக்கு அலகு"** என்பது தற்போதைய கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட ஓர் அதிகார எல்லையாக அமையும். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்தியே அமையலாம். ஆதலால் எதிர்காலத்தில் அங்கு வாழும் தமிழ் மக்களின் இருப்பு என்கின்ற விடயம் இன்னும் தெளிவின்றியே காணப்படுகின்றது. எத்தகைய சூழ்நிலையிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது வடக்கு - கிழக்கு இணைவுக் கோரிக்கையை கைவிடப்போவதில்லை அதற்காக எத்தகைய விட்டுக்கொடுப்புகளையும் கொடுக்க தயார் என்று வெளிப்படையாகவே தமிழ் தலைவர்கள் பேசத்தொடங்கி விட்டார்கள்.

இன்றைய சூழலில் தமிழ் பேசுகின்ற மக்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து போராட வேண்டிய தருணம் வந்துள்ளது. யுத்த காலத்தில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட

தீங்குகளுக்காக தமிழ் சமூகம் மன்னிப்புக் கோரியுள்ள நிலையில் பழைய குரோதங்களை மறந்து நாம் சகோதரர்களாக ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். இனிவரும் காலத்தில் முஸ்லிம்களுக்கு அநீதிழைப்பதற்கு தமிழ் தரப்பு இடமளிக்க மாட்டாது. வட மாகாணத்திலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தங்களது சொந்த இடங்களில் மீண்டும் வந்து குடியேற வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்ற விடயத்தில் கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் விருப்பப்படியே தீர்மானம் மேற்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளது. முஸ்லிம்களின் சம்மதமின்றி வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைப்பு எனும் தீர்வு திணிக்கப்பட மாட்டாது. என்றெல்லாம் தொடர்ச்சியாக தமிழ் தேசியக்கூட்டமைப்பானது முஸ்லீம் மக்களின் சம்மதத்தைப் பெறும் வகையிலான கருத்துக்களை பகிர்ந்தும் வருகின்றது.



தமிழ் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு இருக்க மறுபுறத்தில் முஸ்லிம் தலைமைகள் எவ்வாறான நிலைப்பாட்டில் முன்னர் இருந்தார்கள், தற்போது இருக்கின்றார்கள் என்பதை நாம் அறிந்தே ஆக வேண்டும்.

1988 வடகிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டதன் பின் "வட கிழக்கு இணைப்பு" ஒப்பந்தத்தை எதிர்த்து பேசமுடியாத நிலை வந்தபோதும், இனிமேல் வடகிழக்கு பிரிக்கப்பட மாட்டாது என்ற எண்ணத்தினாலும், 'முஸ்லிம்களாகிய நாம் வடகிழக்கை பிரிக்க முயற்சித்தால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தீராப்பழி ஏற்பட்டுவிடும்' என்ற பயத்தினாலும் "பிரிப்பு" என்ற கோசத்தை முஸ்லிம் காங்கிரஸ் கைவிட்டதாகவே கருதப்பட்டது.

இருந்தாலும் அஸ்ரப் அவர்களின் உள்மனதில் ஏதோ ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் கிழக்கு மாகாணத்தை தனியே பிரித்து விடவேண்டும் என்பதில் அவர் குறியாக இருந்தார் என்பது பிற்காலத்தில் அவர் பங்கெடுத்த தீர்வு திட்டங்களை கவனித்தால் புரிந்து கொள்ளமுடியும். "**கிழக்கு மாகாணம் பிரிந்திருந்தால் தென்கிழக்கும் தேவையில்லை தனி முஸ்லிம் மாகாணசபையும் தேவையில்லை**" என்பதே அவரது எண்ணமாக இருந்தது என்பது பின்னால் கூறும் விடயங்களை வைத்தே நாம் தீர்மானிக்க முடியும்.

அடுத்த இதழில் தொடரும்...

# இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலும் வாழ்வாதாரங்களும்...



ஜெ.ஜெனி - பிரான்ஸ்

இலங்கைத் தீவின் வட கிழக்குப் பிரதேசத்தில் கடந்த நான்கைந்து சகாப்தத்தை தாண்டியும் இன ஒடுக்குமுறைகளாலும், யுத்தங்களாலும், எமது வாழ்விடங்களைப் பறிகொடுத்தும்– வாழ்வாதாரங்களை இழந்தும், வாழ்வுரிமை–கல்வி–கலை– கலாச்சாரம்–பண்பாட்டு விழுமியங்கள்மற்றும் மனிதநேயங்கள் தொலைக்கப்பட்டு மொத்தத்தில், எமது அடையாளங்கள் மறைக்கப்பட்டு, அல்லது மறுக்கப்பட்டு ஏதிலிகளாக எமது தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றோம்.

இதே நிலையில் – இதே சூழல்களால், இந்த நாலு சகாப்த இடைவெளியில்– புலம்பெயர்தேசமெங்கும் பரவிப் படர்ந்து, இருபது லட்சத்தையும் தாண்டி இங்கும் அகதி அந்தஸ்தைஅடிப்படையாக வைத்தே வேர் ஊன்றி வாழ்கின்றோம். எனினும் எங்கு வாழ்ந்திடினும் எம் தாயகமண்ணின் உரிமைகளை – அதன் விழுமியங்களை– அனைத்தின் அடையாளங்களையும்காலவோட்டத்தில் இழந்து விடுவோமோ என்ற பயமும், அங்கலாய்ப்பும் எம்மை நெருடிக்கொண்டே இருக்கின்றது. எம் இந்த ஓரிரு தலைமுறைக்கப்பால் எம் இனத்தின் அடையாளம்தான்என்ன?எந்த வடிவத்தில் இருக்கப்போகின்றதென நாம் யாவரும் சிந்திக்காமல் இல்லை.?

ஆயினும் இந்த இருதளத்திலும் தான், எம் தமிழ் பேசும் மக்களின் வாழ்வியல் நகர்ந்துகொண்டிருக்கின்றது. புலம் பெயர் தேசத்தில் வாழும் நாம் எவ்வளவு சிரமங்களோடு வாழ்ந்தாலும் அடிப்படை மனித நேயமும், அதைப் பாதுகாப்பதற்கான மனித உரிமைகளும் மற்றும்பொருளாதார காலூன்றல்களை மேற்கொள்ளக் கூடிய சூழல்கள் உள்ள மேற்கத்தைய நாடுகளில்நாம் வாழ்வதால், இங்குள்ள நெருக்கடிகளுக்கப்பாலும் நாம் எம் சுயமரியாதைகளை– எதிர்காலத்தை தக்கவைத்துக் கொண்டு வாழக்கூடிய சாதகமான பொருளாதார அடித்தளமுள்ளபலவழிகள் மற்றும் எமது சந்ததியினருக்கான வளமான கல்விமுறைகள் அதைத் தொடர்ந்தவேலைவாய்ப்பு முறைமைகள் ஆரோக்கியமான வாழ்வாதார வழிவகைகள் என பல சாதகமானசூழல்களோடு வாழ்கின்றோம்.

ஆனால் எம் தாயகத்தின் நிலைமையோ கடந்த பல சகாப்தங்களிலும் சரி, யுத்தம் முடிவுக்கு வந்தஎட்டு வருடங்களைத் தொடும் இந்த நிலையிலும் சரி, பாதிக்கப்பட்ட எம்மவர் சமூகத்தின் தரப்பில்நிரந்தர தீர்வினையோ அன்றி வாழ்வியல் மற்றும் வாழ்வாதார முன்னேற்றங்களிலும் சரி,சுயமரியாதையுடனும் தன்நிறைவுடனும் வாழ்க்கையை தொடர முடியாத வாழ்நிலைதான்அங்கு காணப்படுகின்றது. கடந்த சகாப்தங்களில் முக்கியமாக 2004ம் ஆண்டு கிழக்கில் தொடரப்பட்ட கடைசி யுத்தம் 2009ம்ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் சென்ற வருட ஒரு தகவலின் படி:

கிழக்கில் கணவனை இழந்த பெண்கள் 62,384 பேர்
காணாமல் ஆக்கப்பட்டோர் 12,355 எனவும்

வடக்கில் திரட்டப்பட்ட விபரத்தின்படி:

கணவனை இழந்த பெண்கள்: 60,757
கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்: 8,836
அங்கவீனர்கள் :19,724
கைவிடப்பட்ட சிறார்கள்: 1,514

இந்த தரவுகளுக்கும் அப்பால் கைதானோர், சிறையிலிருப்போர், சிறையில் இல்லாமல்ஆக்கப்பட்டோர், என சரியான தரவுகள் இல்லாத எத்தனையோ ஆயிரம் பேர்...

மொத்தத்தில் ஒட்டுமொத்தமாக இன்றுவரை சரியாக கணக்கிட முடியாத நிலையில் கூட, எம் தாயக மக்கள் பல இன்னல்களை சுமந்து கொண்டு மரணத்துள்ளும், மனவலிகளுடனும் ஏதோவாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.



இத்தனைக்கும் அப்பால் யுத்தம் முடிந்து நாட்டில் பல அபிவிருத்தி மையங்கள், அரசுசாரா நிறுவனங்கள், பாராளுமன்ற தெரிவுகள், மாகாணசபை தெரிவுகள், பிரதேசசபை தெரிவுகள் என பல்வேறு திட்டங்கள் அபிவிருத்தியை முன்நிலைப்படுத்தி, மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும், அம் மக்களுக்கான சுபீட்சத்திற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆகக்கூடி வடக்கில், 5மாவட்டங்கள் கிழக்கில் 4 மாவட்டங்கள் உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்கள்வாழும் இரு மாகாணங்களே எம்மவர்க்கு அடையாளமாக உள்ளன. இவற்றை மையப்படுத்திஅரசு நிறுவனங்கள், அரசு யந்திரங்கள் நிர்வாகக் கட்டமைப்பு போன்ற எல்லாமே பார்வைக்குவடிவமைக்கப்பட்டுள்ளனவா? அன்றி இந்த நிர்வாகங்கள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்றுகுறைகூறி தமது கடமைகளை தட்டிக்கழிக்கின்றனவா? அல்லது பல செயலூக்கம்அற்றவர்களிடமும் சுயலாபம் சம்பாதிப்பவரிடமும் எமது மக்களின் தலைவிதி சிக்கிசின்னாபின்னமாகின்றதா?

ஏனெனில் யுத்தம் முடிந்த எட்டாண்டுகளில், பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காக- சர்வதேச நிதி ஒதுக்கீடுகளிலிருந்தும், எம் நாட்டின் வரவு செலவு நிதி ஒதுக்கீட்டிலிருந்தும் சரியான கட்டமைப்பின் மூலம் நேர்மையாகவும், ஆரோக்கியமாகவும் செயற்படுத்தப்பட்டிருந்தால் தமிழ் பேசும் மக்களாகிய எமது தாயகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையும் தன் தேவைகள் நிறைவடைந்துவாழ்வாதார மேம்பாடடைந்திருப்பார்கள். இதன் மூலம் எம் சமூகத்தில் கல்வி,வேலைவாய்ப்புசீர்நிலை, சுய பொருளாதார திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கான முழுமையானசெயற்திட்டங்கள், சமூகத்தில் அதிகளவாக தனித்து வாழவேண்டி நேரிட்டுள்ள பெண்கள்-அவர்களின் குடும்பச் சுமைகள் மற்றும் வறுமை, அறியாமை, சமூக விழிப்புணர்வற்ற தன்மை,கலாச்சார சீர்கேடுகள் என்பன கணிசமான அளவு சீர்பெற்றிருக்கும்.

எனவே இவற்றை ஆய்விற்குட்படுத்த முனையும் அதே நேரத்தில் புலம் பெயர் தேசத்திலோஅன்றி எம் தாயகத்திலோ சமூக அக்கறையோடு சிந்திக்க கூடிய நாம் இவற்றைபதிவேற்றுவதோடு நிற்காமல் எம் வலுவிழந்து போயிருக்கும் சமூகத்திற்கு நாம் என்ன செய்யப்போகின்றோம் என்பதை

சிந்திப்போம் ! அதாவது அடுத்த கட்டமாக இவற்றிற்கானவேலைத்திட்டம் என்ன? இதற்கான அணுகுமுறை என்ன?

எனது சிந்தனையின் வடிவமைப்பில்-புலம்பெயர் தேசத்து நம்மவர் செயற்படுத்தக் கூடிய இருவழிமுறைகளை கையாளலாம் அதாவது:

1) சுயம்பக வடிவிலான மேலிருந்து கீழ் நோக்கிய செயற்திட்டம்:-
தனிநபர்களான நாம் ஒவ்வொருவரும் கூட என் உறவு-என் அயலவன்-என் நண்பன்-என் ஊரான்-என் மாவட்டம் என்ற மட்டத்திலாவது சிந்தித்து தனிப்பட்ட நிலையில், எங்கள் எங்கள் தகுதிநிலைக்கேற்ப நாம் சார்ந்தவர்களுடன் செயற்பட்டு அதன் செயற்பாடே பரவலாக்கப்படும். சமகாலத்தில், இதே தொடர்பாடல்களோடு எமது தாயகத்திலும், எமது குறிப்பிடத்தக்கஎல்லைகளோடு, அங்குள்ள சமூக அக்கறையாளர்களை இனம் கண்டு அங்குள்ள சரியானதரவுகளை பெற்றுக் கொண்டு அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு, சிறுக சிறுக எம்மாலான, எம்மட்டத்திலான நட்பு வலையங்களோடு இணைந்து சிறு உதவிகளை மேற்கொள்ளல். இவ்வாறானதனிநபர்களாலான விஸ்தீரிக்கப்படும் சிறு குழு செயற்திட்டங்கள் கூட அங்குள்ள எம் தாயகஉறவுகளுக்கு வாழ்வாதார மற்றும் கல்வி வாய்ப்புக்களுக்கு கை கொடுத்து உதவுவதாகஅமையும்.

2) சுயம்பக வடிவிலான கீழிருந்து மேல் நோக்கிய செயற்திட்டம்:-
புலம் பெயர் தேசங்களில் ஏற்கனவே எம் தாயக அடையாளங்களைப் பேணும் சமூக அமைப்புசார்ந்த-சங்கங்கள், ஒன்றியங்கள், கழகங்கள் போன்றவற்றின் உறுப்பினர்களாக ஏற்கனவேஇருந்தோ, அன்றி அவ்வாறான அமைப்புக்களில் இணைந்தோ, அன்றி அவ்வாறனஅமைப்புக்களை சமூக அக்கறையுள்ள நாம் சார்ந்த வட்டத்தினருடன் ஒன்று இரண்டாகத்தானும்ஆரம்பித்து செயற்படுத்தல். சமகாலத்தில் இதே தொடர்பாடல்களோடு தாயகத்திலுள்ள சமூகசெயற்பாட்டாளர்கள், அல்லது சிறு சிறு கிராமிய சங்கங்கள், அல்லது பாடசாலை அதிபர்கள்,அல்லது அரசுசாரா நிறுவனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி இங்குள்ள எம்மவர்களில்முடிந்தவர்கள் அங்கு சென்று அவதானிக்கக் கூடிய விடயங்களை கவனத்தில் கொண்டு, எம்மால்முடிந்த வரையறைக்குட்பட்ட- வாழ்வாதார, கல்வி, விளையாட்டுத்துறை,மற்றும் கலை-கலாச்சார-பண்பாட்டு விழுமியங்களை சிறிதளவேனும் அந்த தாயக மக்களுடாக நிலைநிறுத்த,எம்மால் ஆன வழிகளில் ஒத்தாசையாக இருத்தல்.

இவ்வாறான ஒரு சில இலகுவான வழிமுறைகளில் பாதிக்கப்பட்ட- ஏதிலிகளாக்கப்பட்ட எம்தாயக மக்களுக்கு, எம்மால் ஆன பங்களிப்பை பரவலாக செய்வோமானால், அந்த மக்களையும்சுயமரியாதையோடும்- சுபீட்சத்தோடும் ஆரோக்கியமான, தன்நம்பிக்கையான சமூகமாகவழிநடத்த, நாம் எல்லோரும் சிறு சிறு ஊன்றுகோலாக எம் கடமையைச் செய்யமுடியும்.அதாவது, இருபது லட்சம் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களிலிருந்து, வெறும்ஒரு லட்சம் மக்களாவது இதனை முன்னெடுப்போமானால் எம் தாயக மக்களின்சுபீட்சத்துடனான-சகல துறையிலும் தன்னிறைவு அடைவதற்கான வழியை எம்மால் திறக்கமுடியும்.

ஏனெனில்

**'எமது சிந்தனைகளின் சிறு துளிகள் தானே- செயற்பாட்டின் பெருவெள்ளம்'**

புலம் பெயர் வாழ் மக்களாகிய நாம், பல வருடங்களுக்கு முன் எம்தாயக மண்ணை விட்டு, உயிரைகையில் பிடித்து வரும்போது, அந்த மக்களையும் உறவுகளையும் விட்டு வெளியேறினோம்.இங்குவந்த காலங்களில் கூட, எம் தாயகத்தில் நடந்து கொண்டிருந்த இன அழிப்பையும்- யுத்தசூழலையும் காட்டி தாயகத்தின் ஆவணங்களையும், எமது உறவுகளையும் அத்தாட்சிப்படுத்தியே,எமது அரசியல் தஞ்ச வழக்குகளை அடித்தளமிட்டு எமது இங்குள்ள

வாழ்வியலை வழவமைத்துக்கொண்டோம். இதனூடு எமது இங்குள்ள அடுத்த சந்ததிகளுக்குக் கூட வளமான வாழ்வுக்கு வழி சமைத்துக்கொடுத்துள்ளோம்.

ஆனால் நாம் எமது கடைசிக் காலத்தில் கடந்த காலங்களையும் எம் தாயகத்தையும் நின்றுநிதானித்து திரும்பிப் பார்க்கும் போது, இன்றும், தம் இருப்பிற்காக- சுலோகங்களுடன் மக்களின்அவலக்குரல் ஒலிக்கும் சத்தங்களும், தம் வாழ்வியலுக்காக- கையேந்தி நிற்கும் காட்சிகளும், கல்விக்காக- கருணை உள்ளங்களை காத்து நிற்கும் கால்களும், நீதிக்காக போராடத்திரணியற்றஆதங்கங்களும் மொத்தத்தில், இன்னும் இன்னும் எமது உறவுகளை இருள் சூழ்ந்த மேகங்கள்தான் சூழ்ந்திருக்கின்றன.

இதற்கான எம் மன உறுத்தல்களோடு சிறு சிறு பிராயச்சித்தமாக **'எம் தாயக உறவுகளுக்கு எம்மாலான வரை கரம் கொடுத்து உதவுவோம். புலம்பெயர் உறவுகளின் கடமைகளை கரம் இணைந்து செயற்படுத்துவோம்.**


## Association for Educational Development of the Underprivileged

1A Hardy Avenue, South Ruislip, Middlesex, HA4 6SU, UK
Email: admin@aeduuk.org Web: www.aeduuk.org

AEDU
(UK)
Aedu.uk
Reg. No 1142552

AEDU (U.K)

*AEDU (U.K) is a charitable organisation that was inaugurated in 2008. The main AIM was to provide education for underprivileged children who are deprived of educational facilities due to Ethnic war and Natural disasters in Sri Lanka.*

*We are working with the local Charities in Sri Lanka (with similar aims) and have successfully sponsored many children in Kilinochi, Trincomalle, Mannar and Amparai. The target groups are children who do not have parents or have no money to finance their education.*

*Apart from education, we also provide fund to buy bicycles for children who have no other means of transport to go to school. Books, writing materials, school uniform are some other essential items that some children find hard to come by. We are aware of these problems and try our best to provide funds to remedy the situation.*

*The demand for sponsorship is so great that we are constantly looking for people who are willing to help us. We also have organised fund raising cultural shows and social events. To keep a child in education, the average cost is £15 - £20 per month depending on the age of the child. Your support, whether it is a small one off donation or a continued sponsorship will be greatly appreciated.*

"Uplifting the Lives of Underprivileged Children"

# இரு மொழி பேசும் ஒரு இலங்கையர்களை உருவாக்குவோம்.



த. சோதிலிங்கம்

இன்றைய இலங்கையில் பல்தேசிய இனங்கள் என்ற அரசியல் பதத்தை நாம் பாவித்துக்கொண்டு அரசியலில் இயங்குகின்ற போதிலும் இனம் மொழி அடிப்படையிலேயே இன உணர்வூட்டப்பட்டு இனமாக உருப்பெறுகின்றது, இதன் காரணமாகவே நாம் உலகில் ஒரு மொழி பேசும் பல் இனங்களின் தொகைககளை காண முடிவதில்லை, மொழிகள் விருத்திபெற்றாலும் மக்களின் வாழ்வியல் காரணங்களும் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றம் பெற்று புதிய மொழிகள் உருவாக்கம் பெறுவதை தவிரக்க முடியாததொன்றாகும். நம் தமிழ் மொழியிலிருந்தும் வேற்று மொழிகளுடன் இணைந்து உருவாகிய இதர தென்இந்திய மொழிகளின் இவற்றிக்கு நல்ல உதாரணமாகும்.

இந்த மொழிகள் தம்மை இனமாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ள இந்திய உபகண்ட வராலாறே எம் முன்னால் உள்ளது. இனங்கள் தம்மை ஒன்று சேர்த்து இனக் குழுமங்களாக அவை நாடுகளாக வளர்ந்திருப்பது உலக இனங்களின் வரலாறாகவும் எம்முன்னால் இருக்கின்றது.

இலங்கையில் இருக்கும் இரு பெரும் தேசிய இனங்களையும் ஒன்றிணைத்து ஒரு முழுமையான நாடாக இலங்கை கட்டி எழுப்பட்டிருக்கவில்லை என்பதற்க்கு இலங்கையில் புரையோடிப்போயுள்ள தமிழ் தேசிய இனப்பிரச்சனைளே நல்ல உதாரணமாகும்.

இன்றைய இலங்கையில் இரு இனங்களையும் இணைத்து ஒரு பலமான இலங்கையர் என்ற அடையாளத்தை கட்டியெழுப்ப தமிழ் தரப்பிலும் பங்காற்ற வேண்டியுள்ளதை உணர்ந்த அமரர் உமாமகேஸ்வரன் தனது அமைப்பின் ஆரம்ப காலத்தில் சிங்கள மொழியில் வானொலி சேவை ஒன்றை ஆரம்பித்திருந்தார். அன்று தமிழ் மக்களின் பிரச்சனைகள் தமிழ் மக்களின் வரலாறு இலங்கையர்களின் ஐக்கியம் பற்றிய நிகழ்ச்சி நிரலை அடிப்படையாக கொண்டு இந்த வானொலி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

பொதுவாக தலைவர்கள் எனப்படுவோர் வரலாறு என்பதை மிக குறுகிய கால நேரத்தில் தமது குறுகிய நோக்கிற்கு அறிந்தவற்றையே பேசி தமது வாழ்வை தமது குறுகிய அரசியலில் முடித்துக் கொள்கின்றார்கள். இவையே தமிழ் சிங்கள மக்களிற்கு இடையேயான தேசியவாத இனவாதமாக உருவெடுத்து மக்களை இம்சைப்படுத்துகின்றது. எமது இந்திய பிராந்தியத்தின் இந்திய கலாச்சார வரலாறு என்பது பாரிய நீண்ட வரலாறு கொண்டது. ஆனால் தமிழ் தலைவர்களில் பலர், ஐரோப்பியர் வருகை காலங்களின் போது ஐரோப்பிய வியாபார அரசியல்வாதிகளால் ஊட்டப்பட்ட அரசியலை மையப்படுத்தி எமது இந்திய இலங்கை பிரதேச இந்திய கலாசாரத்தின் பாரம்பரியத்தை மறந்து தமது தலைமைத்துவத்தை தமிழ் சிங்கள மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

எமது இலங்கை தமிழ் சிங்கள மக்களின் வரலாறு 2000 வருடங்கள் பின்னோக்கி பார்த்து எமது மக்களின் அடிப்படைகளில் உள்ள ஒற்றுமைகளை முன்கொண்டு வர வேண்டிய தேவை இன்று

உருவாகியுள்ளது. எமது இலங்கை மக்களுக்கான ஒன்றிணைந்த தமிழ் சிங்கள மக்களுக்கான பொதுவான இலங்கையர் என்ற அடையாளத்தையும் அதனுள்ளே தமிழர்கள் என்ற அடையாளத்தையும் உருவாக்க வேண்டும்.



வரலாற்றில் எவ்வளவு உண்மைகள் இருந்த போதிலும் இன்றுள்ள நிலைமைகளில் உள்ள உண்மையின் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படும் யதார்த்த பூர்வமான மாற்றங்களையும் இணைத்து செயற்படுவது முக்கியமானது. இவை இரு மொழிகள் பேசும் ஒரே இன இலங்கை மக்கள் என்ற அடையாளத்தை தோற்றுவிக்க மூலகாரணமாகவும் இருக்கக்கூடும் என பலர் நம்ப ஆரம்பித்துள்ளனர்.

எதிர்காலத்தில் எத்தனை மாற்றங்களை இயற்கையும் மனித வாழ்வுசூழலும் ஏற்படுத்தப் போகின்றனவே என்ற கற்பனையில் மிதப்பதைவிட இன்றே இலங்கையில் உள்ள மக்களிடையேயான இன உறவுகளை பேணும் பணிகள் மிகவும் முக்கியமாகின்றது. இலங்கை வரலாற்றின் ஆரம்ப காலங்களிலிருந்து மிக நீண்டகாலமாக இலங்கைத்தீவில் ஒரே இனமக்களே வாழ்ந்து வந்துள்ளதும் இவர்களின் வாழ்க்கையும் தென் இந்திய பிராந்திய தொடர்புகளும் இலங்கையில் காலத்துக்குக்காலம் மாற்றங்களை கொண்டுவந்திருந்தது அவதானத்துக்குரியது. இந்த மாற்றங்கள் சில சந்தர்ப்பங்களில் முரண்பாடுகளையும் சில சந்தர்ப்பங்களில் உடன்பாடுகளையும் ஏற்படுத்தியிருக்கும். இப்படியான முரண்பாடுகளும் உடன்பாடுகளும் இலங்கைத்தீவில் இன்றுள்ள சமூகத்தில் அழப்டையிலும் சிலமாற்றங்களை உருவாக்கியிருக்கின்றது என்பது உண்மையாகும்.

அண்மைக்கால மரபணுச் சோதனைகளும், வரலாற்று ஆவணங்களின் நிரூபணச் சான்றுகளும் இலங்கையில் வாழும் இரு மொழிபேசும் குடும்பத்தினரும் ஒரே இனத்து இரத்த உறவினர் என்பதையும் நிரூபித்து அதிலும் இலங்கையில் உள்ள எல்லா மக்களும் தென் இந்திய மக்களின் மிக நெருங்கிய உறவினர்கள் என்றும் இவர்கள் மிக நெருக்கமான திராவிட இனத்தவர்கள் என்றும் மரபணுக்கள் உண்மையை எடுத்தியம்பியுள்ளது. இவை தமிழ் சிங்கள மக்களிடையேயான வரலாற்று தொடர்புகளின் நெருக்கம் இலங்கையில் உள்ள இனங்கள் தம்மை ஒரு இனமாக ஒரு புதிய இலங்கைக்குள் இலங்கையர் என்ற இனமாக மிளிர முடியும் என்பதை பறை சாற்றுகின்றது. இந்த வரலாற்று உண்மையும் எமது வாழ்வின் புதுவருட தினக் கொண்டாட்டமும் இன்று வெளித்தெரியும் இனங்களுக்கிடையிலான இடைவெளிகள் மிகக்குறுகியவைகளே என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஒவ்வொருவருடமும் தென்இந்திய, திராவிட, தமிழ், சிங்கள மக்களும் ஒரே காரணங்களுக்காக புதுவருட தினத்தை கொண்டாடுகின்றனர்.

இந்துக்களின் காலங்களின் பின்னர் இந்தியாவிலிருந்த மூடநம்பிக்கைகளை களைந்து மாற்றங்களை இந்திய தத்துவங்களுக்கு கொண்டுவந்து புத்துயிர் கொடுத்தவர் புத்தர். இதனால் இந்திய தத்துவம் உலக தரத்திற்கு உயர்தப்பட்டு புத்தரும் உலகின் முதல் தத்துவ ஞானியாகவும் போற்றப்பட்டார்.

**அடுத்த இதழில் தொடரும்...**

# பாடசாலை நூலகங்களும் எமது சமூகத்தின் வாசிப்புத் திறனும்



என்.செல்வராஜா, நூலகவியலாளர், லண்டன்.

ஒரு சமூகத்தின் அறிவு வெறும் பாடப்புத்தகங்களுடன் நின்றுவிடுவதில்லை. "கண்டதும் கற்கப் பண்டிதனாவான்" என்ற பழமொழி தமிழிலே தானுண்டு. பாடநூல்களும், பாடவிதானத்துடன் (பாடத்திட்டத்துடன்) தொடர்பான உப பாட நூல்களும் ஒரு மாணவனின் பாடத்திட்டம் தழுவிய செயற்பாட்டுக்கு உதவும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இருக்கமுடியாது. ஆனால் பாடத்திட்டம் தாண்டிய புற உலகின் வளர்ச்சியையும், நவீன மாற்றங்களையும், அன்றாட உலகளாவிய நிகழ்வுகளையும் அறிந்துகொள்வதன்மூலமே ஒருவனின் அறிவும், ஆற்றலும் விரிவுபெறும். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்ற வாசகம் கூறுவதும் அதையே. வெறும் பாடநூல்களைப் படிப்பதன்மூலமும், இரண்டுவரியில் ஆதாரபூர்வமற்ற அரைகுறைத் தகவல் தரும் பொது அறிவு நூல்களை மனப்பாடம் செய்வதனால் மாத்திரம் பூரணமனிதனாகிவிட முடியாது. ஒருவேளை தோற்றும் பரீட்சையில் சித்தியெய்திவிடலாம். அது மட்டும்தானா வாழ்க்கை?

ஒரு மாணவனின் விரிந்த அறிவுத்தேடலுக்கான வித்து பாடசாலை நூலகங்களிலேயே விதைக்கப்படுகின்றன. அண்மையில் ஒரு இலங்கைச் சமூகவியல் களஆய்வில் "பாடநூல்களை வீட்டில் வாசிக்கப் பண்ணுவதை பெற்றோர் தண்டனையாகவே குழந்தைகளுக்கு முதலில் அறிமுகப்படுத்துகிறார்கள்" என்ற செய்தி எம்மளவில் புதுமையானதல்ல. இன்றும் சராசரி வீட்டில் துறுதுறுவென்று குளப்படி செய்துகொண்டிருக்கும் தன் பிள்ளையைக் கட்டுப்படுத்த, அப்பிள்ளையை ஓரிடத்தில் இருத்தி "நகராமல் இருந்து பாடப் புத்தகத்தை வாசி" என்று கூறி அடக்கும் பெற்றோரை எமது தமிழ்க் குடும்பங்களில் அன்றாடம் காண்கிறோம். இதன் சமூகப் பாதிப்பு என்னவென்றால், வாசிப்பை ஒரு தண்டனையாக அக்குழந்தை சிறுவயதிலேயே மனதளவில் ஏற்படுத்திக் கொள்வதேயாகும். அதுமாத்திரமல்லாது, தூக்கம்வராதவர்கள் நூல்வாசித்துத் தம் தூக்கத்தை வரவழைத்துக்கொள்ளும் கெட்ட பழக்கமும் உள்ளது. இவை மிகத் தவறான அணுகுமுறைகளாகும்.



ஒருவரது வாசிப்பு சுதந்திரமானதாக இருக்கவேண்டும். தனக்குத் தெரிந்தவைகளிலிருந்தே ஒரு குழந்தை தெரியாததைக் கற்றுக்கொள்ளும். தனக்கு விருப்பியவைகளை வாசிக்கத் தொடங்குவதன்மூலமே ஒருவன் தான் விரும்பாதவற்றையும் விரும்பி வாசிக்கக் கற்றுக்கொள்வான். எதை வாசிக்கவேண்டும் எதை வாசிக்கக்கூடாது என்ற அறிவையும், எதை வாசித்தால் நல்ல விடயங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவையும் காலக்கிரமத்தில் அவர்கள் வாசிக்கும் நூல்களே அவர்களுக்குப் போதித்துவிடுகின்றன. இதனை ஒவ்வொரு நூலகரும் – குறிப்பாக பாடசாலை நூலகரும் தம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

இன்று நூலகர்களாக, நூலகங்களில் வீற்றிருக்கும் பலர் தம்மை 'புனிதமான- ஆற்றல்மிக்க நூலகர்களாக' எண்ணுவதில்லை என்பது எனது கசப்பான அனுபவமாகும். ஏதோ வருவாய்க்காக, சமூக கௌரவத்துக்காக அக்கதிரையில் இருக்கமுயல்வதும், அதற்குத் தூண்டப்படுவதும் ஆபத்தானது. அனுமானின் வாலில் மறைந்துள்ள சக்தி அவரை கடல்தாண்டிப் பறக்கவைக்கும் வலிமை மிக்கது என்ற செய்தியை இராமர் சொல்லும்வரை அனுமானே அறிந்திருக்கவில்லை என்கிறது இராமாயணம். அதுபோல ஒரு பாடசாலை நூலகரின் சக்தி, சமூகப் பொறுப்பு என்பவை என்ன என்பதை விரிவாகச் சொல்லித்தரும் பொறுப்பை அவர்களை நூலகர்களாகப் பயிற்றுவித்த ஆசான்களான 'இராமர்கள்' நிச்சயம் சொல்லிவைத்திருக்கவேண்டும். இன்று வேறுதுறைகளில் கால்பதிக்கமுயன்று தோற்றவர்கள், இலகுவாக நூலகவியல் துறையைக் கண்டறிந்து அதற்கான படிப்பிலீடுபட்டு, ஆரம்ப இடைநிலைப் பரீட்சைகளைச் சித்தியெய்தும் ஒரே நோக்குடன் முயன்று, ஒரு நூலகக் கதிரையை நிரப்பி நூலகராகத் "தொழில்" செய்வதையே இன்று பெரும்பாலான நூலகங்களில் காணமுடிகின்றது. அதற்கான எளிதான 'நோகாத' வழிமுறைகளைத் தேடிக்காட்டுபவராகவே அவர்களது விரிவுரையாளர்கள் காணப்படுகின்றார்கள்.

எண்பதுகளில் நான் யாழ்ப்பாணம், திருநெல்வேலி இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நூலகத்தில் பணியாற்றிவந்தேன். அங்கிருந்துதான் ஈழத்தின் முதல் தமிழ் நூலகவியல்துறைசார்ந்த சஞ்சிகையான "நூலகவியல் காலாண்டிதழ்" உயிர்பெற்று ஏழாண்டுகள் தொடர்ந்தது. நூலகவியல் கருத்தரங்குகள் விடுமுறை தினங்களில் ஏற்பாடு செய்யப்பட்டன. அன்றுவரை இல்லாதிருந்த தமிழ்மொழிமூலமான நூலகவியல் துறைசார் நூல்கள் பல அயோத்தி நூலக சேவைகள் என்ற எனது வெளியீட்டகத்தின் மூலம் வெளியிடப்பட்டன.

இந்நூலகத்திற்கு அருகில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில்தான் வார இறுதிகளில் நூலகவியல் கல்வி போதிக்கப்பட்டது. முதலாம் ஆண்டு மாணவர்கள் உசாத்துணை நூல்கள் பற்றிய விரிவான தேடல் அறிவு மிக்கவர்களாக இருக்கவேண்டும். அவர்களது தேடல் நிஜமானதாக இருக்கவேண்டும். வெறும் பாடப்புத்தக 'நோட்ஸ்'களை நம்பியதாக அவர்களது தேடல்கள் இருக்கக் கூடாது என்பதால், நூலகவியல்துறை மாணவர்களை எனது நூலகத்திற்கு வரவழைத்து அவர்களிடம் 40 கேள்விகளைக் கொடுத்து, அதற்கான பதில்களை எனது நூலகத்தில் உள்ள அனைத்து உசாத்துணை நூல்களிலும் இருந்து தேடிப்பதிவுசெய்து வழங்கும் பயிற்சியை வழங்கிவந்தேன். இது ஒரு இலவச சேவையாக, நூலகவியல் மாணவர்களின் கல்வியை சுவாரஸ்யம் மிக்கதாக ஆக்குவதற்கு தூண்டுகோலாக அமையும் என்ற காரணத்தால் எனது மிகக்கடினமான வேலைப்பழுவுக்குள்ளும் இதனைப் பலகாலம் தொடர்ந்து செய்துவந்தேன். இப்பயிற்சியை பெற்றபலர் இன்றும் உங்களிடையே நூலகர்களாகப் பணியாற்றக்கூடும். அவர்களிடம் நீங்கள் அந்த அனுபவத்தைக் கேட்டறிந்துகொள்ளலாம்.

இந்த இனிய அனுபவத்துக்குத் திடீரென்று நூலகவியல்துறை பயிற்சியாளர் ஒருவரால் தடைவிதிக்கப்பட்டது. அம்மாணவர்கள் நூலகவியலில் 'டியுஷன்' பெறுவதற்காக என்னை அணுகுகின்றார்கள் என்றும், அது தொடர்ந்தால் அங்கு செல்லும் மாணவர்கள் நூலகக் கல்வியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றும் ஒரு கொடூரமான எச்சரிக்கை அவர்களுக்கு விடப்பட்டிருந்தது. இதிலிருந்து சுதந்திரமான அறிவுத் தேடலுக்கு ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் எதிர்ப்பாளர்கள் கல்லிடைத்தேரைகளாக இருந்து வருகிறார்கள் என்பதை அனுமானிக்க முடிகின்றது.

**அடுத்த இதழில் தொடரும்...**

# கவியரங்கு



ப.கஜந்தன்

## எங்கள் குழந்தைகள் அழுகிறார்கள்

அந்த குழந்தைகள் அழுகிறார்கள்
இதுவரை மீண்டு வராத அப்பாவுக்காக
அவர்களின் அம்மா வாசலை
வெறித்துக்கொண்டிருக்கிறாள்
இடை விடாது அழுகிறது அவளின் கண்கள்
இணை பிரிந்து அழும் குயிலின் தகிப்பில் கிடக்கிறது
அவளின் மனம்
அநேகபொழுதுகளில் தற்கொலைக்கு துணியும் அவள்
பால் மணம் மாறாத குழந்தைகளின் முகத்தில்
உயிர்க்க வேண்டியிருக்கிறது
அந்த குழந்தைகள் எப்போதும் போலவே
சேமித்து வைக்கிறார்கள்
தமக்கு வழங்கப்படும் உணவின் பாதியை
வராமல் போன அப்பாவுக்கு
கடவுளின் குணம் அறியாத பிஞ்சுக் குழந்தைகள்
பிராத்திக்கிறார்கள்
அப்பா எப்போது வருவார் என்ற அவர்களின் கேள்வி
தாயை சாகடிக்கிறது
நாளைக்கு என்ற வார்த்தையையே
அவள் பதிலாக எப்போது உச்சரிக்கிறாள்
குழந்தைகளில் ஒருவன் அப்பாவை போலவே
தலை சீவிக்கொள்வதும் அவரின் உடைகளை
அணிவதுமாக இருக்கிறான்
அம்மா குழந்தைகளின் குறும்பை சேர்த்து
வைத்திருக்கிறாள்
கணவன் வந்தவுடன் சொல்வதற்கென்று
எல்லா தடுப்பு முகாம்களிலும்
தன் கணவனின்முகம் தெரிகிறதா என
தேடித் தேடி களைத்துபோய் இருக்கிறது
அவளின் மனமும் கால்களும்
எனது தேசத்தின் கொடிய போர்
ஓவியங்களை கிழித்துக்கொண்டிருக்கிறது
பொம்மைகளை உடைத்து
குழந்தைகள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்
காணாமல் போன அப்பா
மீண்டு வர வேண்டுமென்று
பிரார்த்தித்த படியே
அப்பா
இன்னும் வரவில்லை ...

## மாயக் குவளை

உலகத்தை புனைந்தவனை தேடிக்கொண்டிருக்கிறேன்
என்னை புனையும் குறிப்புக்காக
அந்த குயவன் புனைந்த உலகம் கண்ணாடியிலான
மாயக்குவளையாக என் கைகளில் இருக்கிறது
அதன் ஒவ்வரு இழைகளும் மிக நூதனமானவை
உறவு உயர்வு இரக்கம் பொருள் என்ற படி
மாயக்குவளையின் ஒவ்வரு இழைகளும் இப்படித்தான்
அதனுள் என்னை ஊற்றுகிறேன்
குவளையில் நிரம்பி வழிகிறது நான்
மாயத்துள் மாயமற்று இருக்கிறது எனது உயிர்
குவளையாகி களிக்கிறது வழிகின்ற நான்
எனது எதிர்பார்ப்பின் தூர்தலில்
இழைகள் சிதைய உடைகிறது குயவனின் குவளை
உள்ளிருந்து நிலத்தில் சிந்திய என்னில்
துளிகளாய் சிதறிக்கிடக்கிறது நான் ஊற்றிய
நம்பிக்கைகள்
என்னை ஊற்ற ஊற்ற மாயக்குவளை உடைகிறது
குயவனின் குறிப்புகளுக்குள் புகுந்து
என்னில் மாயயை புனைகிறேன்
மாயக்குவளைக்குள் மாயயை புனைந்த என்னை ஊற்ற
உடையாமல் இருக்கிறது குவளை
குவளையில் வழிகிறேன் மாயத்தில் ஊறிய நான்
உலக இயல்பில் இசைதலில் இருக்கிறது
எனது இருப்பு



## செவ்வருத்தம் பூவே

### அனன்யாவின் கன்னிக்கவி



செவ்வருத்தம் பூவே செவ்வருத்தம் பூவே
எனக்கொன்று சொல்வாயோ..?
செவ்வருத்தம் பூவே செவ்வருத்தம் பூவே
ஈழத்தில் உள்ளாயா.?

வானத்தில் உள்ளது மேகம்
நெஞ்சுக்குள் உள்ளது ஈழத்தின் தாகம்
தமிழே என் தாய் மொழி
தமிழே என் உயிர் மொழி

செவ்வருத்தம் பூவே செவ்வருத்தம் பூவே
எனக்கொன்று சொல்வாயோ..?
செவ்வருத்தம் பூவே செவ்வருத்தம் பூவே
ஈழத்தில் உள்ளாயா.?

நியாயத்தில் உள்ளது தேகம்
அதை நெஞ்சுக்குள் வைத்த தாகம்
அதைத் தான் நீ புரிந்து கொள்
அது நினைவிருக்கும்...

செவ்வருத்தம் பூவே செவ்வருத்தம் பூவே
எனக்கொன்று சொல்வாயோ..?
செவ்வருத்தம் பூவே செவ்வருத்தம் பூவே
ஈழத்தில் உள்ளாயா.?

FIRST AUDIO LONDON &
இணைந்து வழங்கும்
பாடும் குயில்கள் - 2017
www.firstaudio.net
தமிழ் iptv tamil.net

ஈழம் வேண்டுமடி கிளியே – தமிழ்
ஈழம் வேண்டுமடி கிளியே
ஆழ வேண்டுமடி கிளியே – தமிழ்
ஆழ வேண்டுமடி கிளியே

பாடும் தமிழ் இனத்து மொழியும்
நாடும் தமிழ் இனத்து நாடும்
காடும் பூ நிறைந்து காடும் – அந்த
நாடில் தலை நிமிர்ந்த நாடு

மானம் தலை நிமிர்ந்த மானம்
பேணும் தமிழ்க் குடியின் ஊரில்
வானம் தலை குனிந்து போற்றும் – அதில்
ஊனம் இல்லையடி கிளியே

கூனல் வளை உலவும் கரையில்
கானல் எழுவதில்லை மணலில்
ஆழி இசை மெளிரும் திரையில்
உரு மீனோ கவி எழுதி வரையும்

தென்னை மரம் எழுதும் தமிழில்
பாடல் இசைக்குமடி ஓலை
கூடல் பனை முழுதும் ஊடல்
அந்த நாடே இனிக்குமடி கிளியே

உச்சி முகரும் தமிழ் காற்றும்
நொச்சி மரக் கிளையின் கீற்றும்
பிச்சிப் பூவில் எழும் வாசம் – அதில்
பாடி ஆடும் தமிழ்ப் பாட்டு

பச்சைக் கிளிகள் தரும் பேச்சும் – பட்டி
ஆவில் எழுந்து வரும் மூச்சும்
நெஞ்சைப் பிளிந்துருகும் அந்த ஓசை
என்னைத் தூங்க செய்யுமடி கிளியே

நாவல் மரத்து நிழல் வரையும்
நம்மைப் போல நிழல் அசைய
பாடாய்ப் படுத்தும் அந்த நிழலே
என்னைக் கட்டித்தழுவுமடி கிளியே

ஆடும் மயில்கள் ஒரு கூட்டம்
பாடும் குயில்கள் ஒரு கூட்டம்
தாவும் மான்கள் ஒரு கூட்டம்
எங்கள் மண்ணின் இனிமையடி கிளியே

இச்சை தொலைத்த அந்த மண்ணும் –குடி
வாழ்வில் அன்புருகும் பெண்ணும் – அந்த
மண்ணின் பெருமையடி கிளியே – ஈழ
மண்ணின் ஒளியுமடி கிளியே

கஞ்சி இனிக்கத்தரும் களனி – அங்கு
கொஞ்சி மகிழ்ந்திருக்கும் குருகு
இறக்கை விரித்து நிற்கும் அழகு
இரு கண்ணும் களைத்து விடும் போடி

தாகம் தீர்த்துக்கொள்ள இளநீர்
பாகாய் பிளிந்த சுவைப் பழநீர்
ஊற்றே ஆகும் நல்ல பதநீர்
எந்தன் நாடே உயர்ந்ததடி கிளியே

# பொம்மை

அது மிகச் சாதாரண பொம்மை
காலும் கையும் தலையும் அசைக்கும்
மிக மிகச் சாதாரண பொம்மை



கண்டவர் சொன்னார்-
இதற்கு கொம்புண்டு
நீண்ட பல்லுண்டு கடிக்கவும் பார்க்கும்;
கண்களை உருட்டும்; கையினை நீட்டும்

போறவர் வாறவர் உண்டவர் குடித்தவர்
அனைவரும் தொட்டுத் தொட்டுப் பார்த்தனர்
அழுக்குகள் படர்ந்தன
கரியினைக் கொண்டே கோடுகள் வரைந்தனர்
இதுவே இதற்கு அழகெனத் தமக்குள்
குசுகுசுத்துத் திரிந்தனர்

குழந்தைகள் வந்தன;
பொம்மையுடன் சின்னக் கதைகள் பேசிச்
சிரித்துக் கொண்டன.
தங்களோடு ஆடியதாகவும் பாடியதாகவும்
கதைகள் அளந்து மகிழ்ந்தே சென்றன

நாலும் தெரிந்த நங்கையர் வந்தனர்
நாலு சீலை நாலு வளையல் போட்டுப் பார்த்தே
தம்மைப் போல இருப்பதாய் கூறி அகன்றனர்
ஆடம்பரமாக அப்பட்டணத்துப்
பெரும் புள்ளிகள் நெருங்கினர்
பொம்மையை அங்குமிங்கும் அசைத்துப் பார்த்தனர்
பொம்மைக்குக் கொஞ்சம் எரிச்சல் குணமும்
பொறாமைக் குணமும் உண்டு
முயற்சியற்ற சோம்பல் பொம்மை



பணத்தாசையற்ற வேண்டாப் பொம்மை
தூக்கியே போட்டனர்.

தொட்டதும் விட்டதும் போதும்;
பொம்மைக்குத் தெரியுமோ.?
தத்தம் இயல்பைத் தன்னில் பொருத்திய
மடைமையர் போக்கு...

-மாதவி சிவலீலன்-

# தமிழ் வளம்:



அகராதி விளக்கம்.:வலிமை, செல்வம்; பயன்; அழகு,பெருமை, மாட்சிமை.
**திருக்குறள் செய்யுள்** , 14, 51, 480

*"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்,*
*மங்காத தமிழ் என்று ..."*
புரட்சிக் கவி பாரதிதாசன்,

மேல் கண்ட வாறு வளம்· என்ற பதத்துக்கு, தமிழில்: "தீந்தமிழ் மொழி பேசி, வரையறை கொண்ட எல்லைக்குள்; ஆயிரம் ஆயிரம் யுகங்கள் வாழும் கலாச்சாரத் தொன்மையைக் கொண்ட ஒரு சமூகத்தின் மொழி வளம், கல்வி வளம், பொருள் வளம், பண்பாட்டு வளம், கருத்தியல் வளம் என்று பல கோணங்களில் பொருள் கொள்ளலாம்,"

இப்படியான மொழி, கலாச்சார, பாரம்பரியத் தொன்மையுடன் தமிழர் நாம் என்ற இறுமாப்புடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டியவர்கள் நாங்கள், நாம் அப்படி வாழ்கின்றோமா? இதுவே, இங்கு வரைய பட்டுள்ள எனது கட்டுரைக்கான முடுக்கி,

வாசகர்களே, இன்று தன் முதல் மடல்விரிக்கும் சுயமரியாதை· சஞ்சிகையின் வெளியீட்டுத் திருநாளன்று, உங்களின் தோள் அணைத்து, ஒரு சில நிமிடங்கள் என்னுடன் தமிழ் வளத்தின்·பொருள் ஆய்வு நடத்திட அழைக்கிறேன்.

இந்த ஆய்வுக்கு நான் மேற்கொள்ளும் அணுகு முறை, விமர்சன ஆயுதம் ஒப்புடைச் சீர்; மேல் கூற பட்ட பதங்கள் இயல்பாக முடுக்கி விடும் அக . புற சீர் என்ன? சிதைவு என்ன? அழகென்ன? அலங்கோலம் என்ன? தொன்மை என்ன? சீழ் வடியும் தொழு நோய் என்ன? என்பவையே நான் இங்கு உங்களுடன் ஆய்வுக்கு உட்படுத்தவும் விமர்சிக்கவும் எடுத்துக் கொண்டுள்ள கரு,

1 . வலிமை. வன்னிக் கடலோரம் நாம் காட்டிய புற வலிமையை நாளைய சரித்திரங்கள் எழுதும், யுகம், யுகமாய், வங்கம் கொண்ட தமிழன், இமயம் வென்ற தமிழன், என தமிழன் வீரம் பேசும் - தாய்த்திரு நாடாம் தமிழ் நாட்டு - இலக்கியங்கள், காவியங்கள் பின் தள்ளப்பட்டு; 21 ம் நூற்றாண்டில் வலிமைக்குப்புதுக்கரு விதைத்தான் ஈழத்து தமிழன் என்று பாடிடும், இனி வரும் யுகத்து காவியங்கள் அனைத்தும், அது வலிமை கொண்ட தோள் கொண்டு எங்கள் வீர கிழவன், கிழத்திகள் (இளவோர் கிழவோர்) நடாத்திய வீரத்தின் உச்சம் அது.

இது ஈழத்துப் புற வலிமையின் உச்சம் எனில், அதன் அகத்துச் சீரை ஒரு கணம் பாரீர்; இந்த யுத்த காலத்தின் பின்புலத்தில் தான் கை கோர்த்து, பின் கத்தியால் குத்தினோம், "துரோகி- நாமம் இட்டு நீதி கேட்டோரை வீதி ஓரத்துக் கம்பங்களில் பிணைத்துக் கொன்றொழித்தோம். ஒத்துடை ஓடின் முயற்சி, பிரித்திடை ஓடின் வீழ்ச்சி என்று வன்னி கடலோரம், சரித்திர பாடமும் கற்றோம். இது எம் அகத்து வலிமையின் அலங்கோலக் காட்சி.

2. செல்வம். ஒவ்வொரு தமிழ் மகனும் ஒரு ஆயுதச்சாலை, தொழில் முனைவன், பொருளீட்டாளன்; சுய சுபிட்சம் படைக்கவல்ல குடிமகன் என்று வாழும் இடம் எல்லாம் மாற்றோர் விந்தை கொண்டு பார்க்க வாழத் தெரிந்தவன் தமிழன் என்று பெயரும் பெற்றவர் நாம்.

அது செல்வம் என்ற பதத்தின் புற சூழல் எனின், அவன் அகச் சூழலில் எவ்வாறு தன் செல்வத்தை விரயம் செய்கிறான் என்று பாருங்கள். காட்டு மூலையில் பக்தர் அற்ற கோவில் கட்டி, அத்துடன் கொலு மண்டபமும், தேருக்கு நிழல் மாடமும் அமைப்பவன்; போரில் ஊனமுற்ற வீரனுக்கும், ஊதியமற்ற விதவைக்கும், நாதியற்ற சிறுவோருக்கும் பொருளுதவி ஈந்திடான், என்று தலை குனிந்து நிற்கின்றது தமிழ்ச் செல்வம்.

3. பயன். கைகூடும் பயனைக் காக்கத் தெரிதல் சாலச் சிறந்தது ஆக்கமுற உழைக்கும் மாந்தர்க்கு. குருதிப் புனல் ஊற்றி, வீழ்ந்தோர் ஈகை மேட்டில் விளை நிலம் ஈந்த பயன் தான் வடமாகாண சபை. எதிர்பார்த்த விளைச்சல் இல்லை என்று கமம் எரிக்கும் ஏராளனும் இல்லை; உறு மீன் கிட்டவில்லை என்று பறி மீனை ஆழியில் எறியும் பித்துக் கரை வலையோனும் இல்லை இந்த மண்ணில்.

இதற்கு எதிர் மறையாக, வீரம் விலை போகாது, விவேகம் உச்சம் உறா விடின், போர் முகத்துக்கு அப்பால் பிறிதோர் தர்மமாம், சாணக்கியம், ராஜதந்திரம் என்பவை உண்டு என்பதை நாம் உணராததால், அல்லது அதனை வகையாகக் கையாளததால், எமது போர்க்கால வீரம் விலை போகாது மண்ணில் சரிந்தது. .

அதே தவறை நாம் மீண்டும் இழைப்போமானால், இந்த வட மாகாண சபையும் முள்ளி வாய்க்கால் சரிந்த கனவு போல் பயனற்றுப் போய் விடும். இருப்பதில் படை, இல்லாததற்கு முனை, இதுவே கனமான கருத்தியல் பொருள். இதை புரியா அரசியல் தலைமைகள் விடை பெறுவதே முறை.

பெருமை . தமிழ் மொழி, கலை, கலாச்சாரத் தொன்மையின் பங்காளிகள் நாம். இன்று உலகின் மூத்த மொழியாக, பண்டைய கலாச்சாரமாக, அமெரிக்க,

ஐரோப்பிய முதுகலை மையங்களும், அறிவியல் வல்லுனரும் அங்கீகரிக்கும் தமிழ்ப் பாரம் பரியத்தின் ஏகோபித்த வாரிசுகள் தமிழராகிய நாம். அதனை பெருமையுடன் உரைத்து மார்தட்ட வல்ல பண்பு, செழுமை கொண்டோர் நாங்கள். இது அதன் புறத் தோற்ற வலிமை.

சற்று இந்தத் தமிழ்க் கொடி பறக்கும் கோட்டை வாயிலில் இருந்து தமிழ் சமுதாய அகத்தைப் பார் தமிழா! அங்கே சீழ் வடியும் சாதிய ஒடுக்கு முறைகளைப் பார் தமிழா! ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாய் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் உங்களில் ஒருவரான அவர்களை ஒடுக்கி நீ செய்த மனித நீதி மீறல்களை ஒரு தடவை திரும்பி பார் தமிழா!

ஐம்பது ஆண்டுகளாய் உன்னை ஒடுக்கிய சிங்களத்தை உலக நீதி மையத்தின் குற்ற வாளிக் கூண்டில் நிறுத்தவும், நீதி கேட்கவும் துடிக்கிறது உன் தமிழ்ப்பற்று. ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாய், ஆகமங்கள் பேரிலும், ஆன்மீக (அ)தர்மங்கள், பேரிலும் தமிழ் இனம் தன் பாதியின் மீது இழைத்த துன்பவியல் ஒடுக்கு முறைக்கு எங்கு போய் நீதி கேட்பது? எந்தக் குற்றவியல் மையத்தில் இழைத்த கொடுமைக்காய் அபராதம் கேட்பது? இழப்பீடு கேட்பது?

சிங்களம் ஒடுக்குகிறது என்று வீர வாள் தூக்கியவர்களே, உங்களால் ஒடுக்கப்பட்டவர்கள் வாள் தூக்க தெரியாதவர்கள் அல்ல. உன்னுடன் மொழி, பண்பு, கலாச்சாரத்தால், ரத்தமும் சதையுமாய் இணைந்தவன் என்பதாலேயே, அவன் உன்னுடன் சமர் நடத்த முனையவில்லை. மேலும், தமிழின் தொன்மைக்காய், அதன் மாட்சியில் கட்டுண்டு, உன்னுடன் இணைந்து பொது எதிரியைக் களத்தில் கண்டவர்கள் தான் இவர்கள், நாளையும் வர இருப்பவர்கள். சமுதாயச் சீர் இன்றி எந்த பெருமையும் உன்னைச் சேர்ந்திடாது, சுதந்திரமும் உன்னை அணுகிடாது.

தமிழ், தமிழ் என்று பெருமை கொண்டு உருகும் ஈழத்துப் பாரம்பரிய தமிழர்களே, காலனித்துவத்துடன் கால்நடையாய் மலையகம் வந்தோர் உன் உடன் பிறப்புக்களாய்த் தெரிய வில்லையா? வள்ளுவன், கம்பன், இளங்கோ என்று தமிழ் மொழிப் புலவர் உறவு பேணும் ஈழத் தமிழா, அந்த வல்லோரின், நல்லோரின் சமகால வாரிசுகள்தானே இவர்கள் என்பதை நீ உணரவில்லையா?

அவரை ஏளனமாய் இகழ்கின்றாய், வன் சொல் கொண்டு வதைக்கின்றாய், அவர்கள் நேற்று வந்தவர்கள், உன் போல் நெடும் பூர்வீகம் கொண்டவர்கள் இல்லை என்பதனாலா? உன்னுடன் நெடும் காலம் வாழும் ஒரு பகுதியை நீ

நீதியாய் நடத்தவில்லையே/ இப்போது புரிகிறதா உன் பெருமை என்ற பதத்தின் பின் உறையும் சமூகச் சீழ் என்ன என்று.

அனைத்து வளங்களும் கொண்டு, மனித தர்மம், நீதியின் பால் பற்றும் கொண்டு வாழும் சமூகம் தான் மாட்சி பற்றிப் பேச அருகதை உடையோர். இன்று உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழ்ச் சமூகம் மாட்சி பற்றிப் பேசு முன்பு, தமிழ்ச் சமூகத்தின் அக முரண்பாடுகளைக் களைந்து, அதனுள் புரை ஓடிக் கிடக்கும் அக வேற்றுமைகளை ஒழித்து, மனு நீதி, மனித தர்மம், மனித உரிமை, மனித நேயம் என்பவற்றின் பால் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்களாகத் தமிழர் நாம் வாழும் பொழுது தான், தமிழ் மாட்சிமை பற்றிப் பேசும் அருகதையை நாம் பெற்றவர் ஆவோம். அப்போது தான் தமிழ்ச் சமூகம் வளமான சமூகமாகத் தன்னை அடையாள படுத்தி கொள்ள முடியும்.

தற்சமயம், நாம் எமது மொழி, கலாச்சார, பாரம்பரிய தொன்மையின் வெப்பத்தில் குளிர் காய்பவர்களாக உள்ளோமே அன்றி, எம்முள் சிதலுற்று, சீழ் வழிந்து, நிற்கும் எம் உள்ளகத் தொழு நோய்களுக்கு மருந்து தேடுபவர்களாக இல்லை.

எனவே, இந்த சுயமரியாதை என்ற சஞ்சிகை இவ்வாறான தமிழ் வள உள்ளகச் சீர் ஆய்வுக்கும், மேம்பாட்டுக்கும், ஆய்வுக் கூடமாக, ஆக்கக்கருவாக அமையுமானால்; வரும் காலங்களிலாவது ஈழத்தமிழன் சுயமரியாதை என்ற கோட்பாட்டின் வழி நின்று, அவனை இடுக்கப் பிடித்துள்ள பேதமைகளைக் களைந்து, நீதிவழி வாழ்பவனாக மாறுவானேயானால்; இந்தச் சஞ்சிகையின் பணி நாளைய சரித்திரங்களில் நிச்சயம் பதிவாகும். அதற்கு என் அகம் நிறைந்த வாழ்த்துக்களையும் இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

*ஜேசன்*
*செயலாளர்*
*தமிழ் தகவல் நடுவம்*

நினைவுகள்
NINAIVUKAL
Notice/Adverts
www.ninaivukal.co.uk

# 1986 தலவாக்கெலை பேரெழுச்சி மலையகத்தின் அமைதியின் பின்னால் மறைந்திருக்கும் வீரத்தின் வெளிப்பாடு..!



**பி ஏ காதர்**

மலையகம் என்றால் தேயிலைச் செடிகளால் பட்டுக்கம்பளம் விரிக்கப்பட்டு மூடப்பட்டிருக்கும் பச்சைப்பசேலென்ற மலைகளும் அதில் துயர்படர்ந்த முகத்துடன் கூடை சுமந்து பனியிலும் மழையிலும் வெயிலிலும் கொழுந்து பறிக்கும் பெண்களின் முகமும் இடிந்து விழும் நிலையிலுள்ள மாட்டுத்தொழுவம் போன்று வரிசையாக நிற்கும் லைன்வீடுகளும் தான் மனக்கண்ணில் தோன்றும்.

ஆனால் இந்த மக்களின் அமைப்புமயமாக்கப்பட்ட வாழ்க்கை முறையின் வலிமை பலருக்கு தெரியாமல் இருக்கலாம். ஒரு கூறைக்கு கல் விழுந்தால் நூறுகுடும்பங்கள் விழித்தெழுந்து ஒன்று கூடும் நிலையில் வாழ்வதும் ஒரு மணித்தியாளத்துக்குள் பல ஆயிரம் தொழிலாளர்கள் தமது தொழிற்சங்க தலைவர்களின் அழைப்பை ஏற்று ஆவேசமாக ஒன்று திரளும் சாத்தியமும் எத்தகைய பலம் என்பதை பலர் அறியாமல் இருக்கலாம். ஆனால் அந்த அசுர பலத்தின் வீரியத்தை வரலாற்றில் பலதடவைகள் மலையக மக்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அதன் உச்சத்தை தொட்ட சம்பவம்தான் 1986 தலவாக்கெலை பேரெழுச்சி.

**பின்னணி:**



நீண்டகாலமாக தலவாக்கெலை நகரில் சிங்கள வர்த்தகர் -சிங்கள காடையர் – குடியேற்றவாசிகள்- சிங்கள பொலிசார் ஆகியோரினது கூட்டு அடாவடித்தனங்கள் 1970களின் பின்னர் மேலும் அதிகரித்துவந்தது. 1983 ஜூலை வன்செயலுக்குப் பின்னர் இவர்களது கை மேலும் ஓங்கியிருந்தது.

வருடாவருடம் தைபூசத் திருவிழா தலவாக்கொலை கதிரேசன் கோயிலில் நடைபெறுவதும் கோயிலிலிருந்து புறப்பட்ட அலங்கார இரதம் நகர் வலம் வருவதும் வழமையாக இருந்தது. 83 வன்முறையின் அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபடாத நிலையில் 1984 தை பூச தேர்-வலம் நடத்துவதற்கு சிங்கள கடைவியாரிகள் ஆட்சேபனை தெரிவித்திருப்பதாகவும் அதனால் கலவரம் வரலாம் எனவும் பாதுகாப்பு அமைதியைக் காரணம் காட்டி பொலிசார் தடைவிதித்தனர். ஆகவே நகர தேரூர்வலம் 1984ல் நடைபெறவில்லை. இதனால் இங்குள்ள தமிழ் இளைஞர்கள் ஆத்திரமடைந்திருந்தனர்.

1985 தைபூச திருநாளன்று எந்த வடிவத்தில் என்ன பிரச்சினை வந்தாலும் எதிர்கொண்டு தேரை நகரத்தில் வலம்வரச் செய்வது என்ற திடசங்கட்பத்துடன் பெ. சந்திரசேகரன் தலைமையில் தமிழ் இளைஞர்கள் துணிந்து முன்னின்றனர். பொலிசார் கடந்த வருடத்தைப் போல இத்தடவையும் தடை விதிக்க முயன்றபோது முறுகல் நிலை

ஏற்பட்டது. நிலைமையைப் புரிந்து கொண்டு பொலிசார் அனுமதி வழங்க நேர்ந்தது. இதனையடுத்து தேர் வெற்றி வலம் வந்தது. அன்றைய தினத்தில் ஏற்பட்டிருந்த உத்வேகத்தின் முன்னால் சிங்கள இனவாதிகளால் எதுவும் செய்யமுடியவில்லை. இதனை அவர்கள் ஒரு தோல்வியாகக் கருதினர். அவர்களால் அதை சீரணித்துக் கொள்ளமுடியவில்லை. அதன்பின்னர் அவர்கள் தமது ஆத்திரத்தை அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தனர். தனியாக சாமான் வாங்குவதற்காக நகருக்குச் செல்லும் தமிழர்கள் தாக்கப்படுவது சாதரண நிகழ்ச்சியாகி வந்தது. சில சிங்கள பொலிசார் இதற்குத் துணைபோயினர். வலுவான காரணம் எதுவுமின்றி தமிழ் இளைஞர்கள் இருவராகவும் மூவராகவும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு தாக்கப்பட்டு பின்னர் தொழிற்சங்கங்கள் தலையிட்டதும் விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கு சிகரம் வைத்தாற்போல 1985 செப்தம்பர் மாதம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஒரு சிங்கள கடைக்காரன் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் ஒரு தமிழ் இளைஞன் சில சிங்கள பொலிசாரால் நிர்வாணமாக்கப்பட்டு நகரினூடாக இழுத்துச் செல்லப்பட்ட சம்பவம் இப்பகுதி தமிழ் மக்களை ஆத்திரங் கொள்ள வைத்தது. பொங்கி எழுந்த மக்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு தலவாக்கெலை பொலிஸ் நிலையத்தை சூழ்ந்துகொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்களுக்கு ஆதரவாக பெ. சந்திரசேகரன் வெளிப்படையாக செயற்பட்டார். பீதி கொண்ட பொலிசார் தமது பாதுகாப்புக்கு தலவாக்கெல இதொகா காரியால உத்தியோகத்தர்களின் உதவியை நாடினர். இதொகா தலையிட்டு அன்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. அவ்விளைஞர் விடுதலை செய்யப்பட்டார். அதில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர். இதனால் தலவாக்கெலை நகர சிங்கள இனவாதிகள் மேலும் ஆத்திரமடைந்திருந்தனர். அவர்களது கோபம் சந்திரசேகரன் மீது திரும்பியிருந்தது. இது பற்றிய அனுரபண்டாரநாயக்கவின் பாராளுமன்ற இனவாத பேச்சுகள் இவர்களுக்கு மேலும் தூபமிட்டன.

நாடற்றவர்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதற்காக இ.தொ.க நடத்திய பிரார்த்தனைப் போராட்டம் 1986 ஜனவரி 14ம் 15ம் திகதிகளில் நடைபெற்று முடிவடைந்திருந்தது. இந்திய அரசும் இவ்விவகாரத்தில் தலையிட்டு ஒரு தீர்வு பிறக்கும் நிலையில் சிங்கள இனவாத அலை மீண்டும் மலையகத்தில் மேலெழுந்திருந்தது. அஸ்கிரிய பீடாதிபதி பலிபான சந்தானந்த தேரர் நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படுவதை கண்டித்து அது சம்பந்தமாக மக்கள் அபிப்பிராயத்தேர்தல் நடத்தப்படுதல் வேண்டுமென அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார். ஜனவரி 20ந் திகதி ஸ்ரீமா பண்டாரநாயக்க நீண்ட அறிக்கை ஒன்றைவிடுதிருந்தார். அதே தினம் பெல்மதுல்லயில் நடைப்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் “ நாம் வடக்கிலிருந்தும் தாக்கப்படுகிறோம். இனி மலையத்திலிருந்தும் தாக்குதல் தொடங்கப்பட்டால் சிங்களவர்கள் கடலில் குதிப்பதைத் தவிர வேறுவழியில்லை” எனப் பேசியிருந்தார். இதனால் இனவாத சக்திகள் மலையக மக்கள்மீது ஆத்திரம் கொண்டிருந்த வேளையது.

**அடுத்த இதழில் தொடரும்...**

நவஜோதி ஜோகரட்னம் - லண்டன்.



'நாங்கள் லண்டனுக்கு கப்பலால்தான் பயணம் செய்து வந்தோம். கறிக்குப் போடுகிற மிளகாய்த்தூள், சமைக்கிறதுக்கு கருவாடு, கோப்பி போன்ற சாமான்களை யாழ்ப்பாணத்திலிருந்துதான் கொண்டு வருவோம். அப்படிக் கொண்டு வந்தால்தான் எங்கட சாப்பாட்டை கொஞ்சம் சுவைபடச் சாப்பிடலாம். இலங்கையிலிருந்து மேற்படிப்புக்கென்று வருகிறவர்கள் எல்லோரும் கட்டிக் காவிக் கொண்டுதான் வருவோம். யாழ்ப்பாணத்தை இறக்குமதி செய்தது போலல்லவோ இப்போது லண்டனில் எல்லாப் பொருட்களும் இருக்குது.

என்னுடைய பிள்ளைகள் லண்டனில் படித்துப் பட்டம் பெற்றார்கள். ஆனால் திருமணம் என்பதில் நாட்டம் கொள்ளாது இருந்துவிட்டார்கள். இப்ப துயர உணர்வில் வாழ்க்கையை ஓட்டுகின்றார்கள். திருமணத்தை விரும்பாது சுதந்திரமாக வாழவேண்டும் என்று தனிமையில் வாழ்கின்றவர்களும் இருக்கிறார்கள். வெளிநாட்டவர்களில் மோகங்கொண்டு கல்யாணம் செய்தவர்களும் உண்டு. சிலர் சிறப்பாக இருக்கிறார்கள். சிலரின் வாழ்க்கை இடையில் முறிந்தும், சீர்கெட்டுப்போயும் இருக்குது. நவீன உலகில் திருமண வாழ்வும் புதுப்புது உருவம் பெற்றுக்கொண்டுதான் வருகின்றது.

என்ன இருந்தாலும் என்ர பிள்ளைகள் தனித்து வாழ்வது என் சிந்தனையை எந்த நேரமும் அரித்துக்கொண்டுதான் இருக்குது' என்று இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக லண்டனில் வாழ்ந்துகொண்டிருக்கும் அன்ரி எப்போதும் தான் படிக்க வந்த பெருமையையும், தனது பிள்ளைகளின் கவலையையும் கூறிக்கொண்டே இருப்பார்.

ஷாலினியுடன் அன்ரியின் ஆதங்கத்தைக் கதைத்துக் கொண்டிருந்தேன். திருமணங்கள் பற்றித் திரும்பியது பேச்சு.

இலங்கையில் பெற்றோர் விருப்பத்தின்படி திருமணம் முடித்து வந்தவள் ஷாலினி. லண்டனில் பிறந்து வளர்ந்தவர்தான் மாப்பிள்ளை. தற்போது ஷாலினி லண்டனில் தனியார் வைத்தியசாலையில் தாதியாக வேலை பார்க்கிறாள். பட்டப்படிப்பிற்காக லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டும் இருக்கின்றாள் ஷாலினி.

'திருமணங்கள் சொர்க்கத்தில் நிர்ச்சயிக்கப்படுகின்றன' என்று எமது முன்னோர்கள் கூறியதை சொன்னபோது

ஷாலினி பக்கென்று சிரித்தாள்.

'ஏன் சிர்க்கிறீர்கள் ஷாலினி?'

'எனக்கும் திருமணம் சொர்க்கத்தில் இப்படிதான் என்று எழுதப்பட்டு இருந்திருக்கிறது போல் தெரிகிறது'

ஷாலினி அன்பே வடிவம் கொண்ட இளம் தாதியாகப் வவுனியா ஆஸ்ப்பத்திரியில் பணிபுரிந்தவள். அவளின் மகிழ்வான காலங்கள். அவளைப் பாராட்டிய நிகழ்ச்சிகள் எல்லாமே நேற்று நடந்தது போல் இருக்கிறது.

'பிள்ளை நல்ல ஒரு சம்பந்தம் லண்டனில் இருந்து வந்திருக்கிறது. எம்மைப்போன்று கத்தோலிக்க சமயமாம். லண்டனில் நல்ல வேலை செய்கின்றாராம். அந்தப் பையனின் தந்தையும் நல்ல உத்தியோகத்தில்தான் இருக்கிறாராம். அத்தோடு நல்ல இறை பக்தியுள்ள குடும்பமாம். ஞாயிறு பூசைகளுக்கு தவறாமல் சென்று வருபவர்களாம். அத்தோடு சோலி சுரட்டு எதுவுமின்றி தாமும் தமது குடும்பமும் என்று வாழ்பவர்களாம் பிள்ளை. லண்டனிலுள்ள குருவானவர் ஒருவர்தான் இத்திருமண ஒழுங்குகளைச் செய்கின்றார். நீயும் இங்கு படித்து தாதியாகப்பணி புரிந்து கொண்டுதானே இருக்கின்றாய் பிள்ளை. உனக்கும் திருமணம் செய்யும் வயது வந்து விட்டதுதானேயம்மா! குடும்பத்தில் மூத்தபிள்ளை கொஞ்சம் தலையெடுத்தால்தானே உனக்குப் பின்னால் இருக்கிற தம்பி தங்கச்சியின் எதிர்காலம் நன்றாக அமையும்' தான் பணியாற்றும் ஆசிரியப்பாணியில் மகள் ஷாலினிக்கு விளக்குகின்றாள் அம்மா.



'லண்டனில் பிறந்து வளர்ந்தவர் என்கிறீர்கள் அம்மா. அவர் என்ன தமிழ் கதைக்கமாட்டார் தானே! அப்போ எப்படித் திருமணம் செய்வது?'

ஷாலினியின் வீட்டைச் சுற்றியுள்ள அழகிய பூக்களின் மெலிந்த குமுறல் ஆழ்ந்துகொண்டே போகிறது. லண்டனில் பிறந்த மாப்பிளைக்கு ஏன் இலங்கையில் பெண் பார்க்கிறார்கள்? இன்றைய நவீன உலகில் இது என்ன பேச்சுக் கலியாணம்? மனமும் உணர்வும் சங்கமித்து மனஅரங்கில் உரசிக்கொள்ளும் நிச்சயதார்த்தம்தானே காதல். ஒருவரைக் காதலிக்காமல் எப்படிக் கல்யாணம் பண்ண முடியும்? மத்தளம் போல் ஷாலினியின் மனதில் எண்ணங்கள் அடித்துக்கொள்கிறது.

'லண்டன் மாப்பிளை. தமிழ் கதைக்கத்தெரியாதவராம். அவரோடு எப்படி அன்பு என்ற உணர்வை வெளிப்படுத்த முடியும்? ஒரு ஆசிரியையாக இருந்தும் ஏன் எனது அம்மாவால் புரிந்து கொள்ளமுடியவில்லை? மலரினும் மெல்லிய காமத்தின்பால் சிலர் மட்டும் தலைப்படுவது எதற்காக? ஆசையையும். அன்பையும் ஒருமுகப்படுத்தி மனமிழக்க ஏன் மனிதர்களால் முடியவில்லை?' ஷாலினியின் மனதில் பல கேள்விகள் உதிர்ந்துகொண்டே இருந்தன.

மனதில் வருத்தமும், குமுறலும் இருந்தாலும், சமூகத்தில் தம் பிள்ளைகளை நல்லவனாக்க வேண்டுமென, தம் பிள்ளைகளின் நன்மை கருதித்தானே பெற்றோர்கள் செயற்படுவார்கள். இருந்தும் எம்முடைய ஆதி உணர்வுகளைத்தானே பல வகைகளில் எமது சமூகம் இன்னும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. இவ்விதம் எண்ணிய ஷாலினி, கிறிஸ்த்தவப்போதனை செய்யும் குருமார்கள் மூலமாகவே இத்திருமணம் ஒழங்கு செய்யப்படுகின்றதே! இறை அன்பில் நம்பிக்கை கொண்ட ஷாலினி ஏதோ கடவுள்சித்தம் என்று ஆறுதல் கொள்கின்றாள். 'பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக..' எனத் தான் வணங்கும் இறைவனை வேண்டிக் கொள்கின்றாள் ஷாலினி.

லண்டனில் இருந்து மாப்பிளை குடும்பம் வருகின்றார்களாம். நேரடியாகவே வந்து பெண் பார்க்கப் போகிறார்களாம். பெண்ணைப்பிடித்தால் திருமணம் செய்துகொண்டு பெண்ணையும் தம்முடன் லண்டனுக்கு அழைத்துச் செல்லப் போகிறார்களாம். மாப்பிளையின் உறவு மாமனார் மூலம் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

இடைத்தரமான வாழ்க்கையைக் கொண்ட சாதாரண குடும்பம் நாங்கள். ஷாலினியின் மனம் அங்கலாய்க்கிறது. என்னுடைய பெற்றோர் ஏன் எனக்காக இவ்வளவு கஸ்டப்படுகிறார்களோ தெரியவில்லை. நான் வணங்கும் யேசு என்னை வழி நடத்துவார். குடும்பங்கள் சேர்ந்து ஆரவாரப்பட்டு பெண்பார்க்கும் நாளை வரவேற்று அலங்கரிக்கின்றார்கள்.

லண்டனில் இருந்து வந்த மாப்பிளை வீட்டார் பெண்வீட்டுக்கு வருகின்ற நாள். மாப்பிளையோடு அவரின் தாய், தந்தையும் பெண் பார்க்க வருகின்றார்கள்...

அடுத்த இதழில் தொடரும்...

*வேல் தர்மா*

சுயமரியாதையுடன் நடப்பது பெரும் சவாலுக்கு உரிய ஒன்றாகும் என்பதைப் போல ஒரு ஊடகத்தை நடத்துவதும் சோதனைகள் மிக்க ஒன்றே. உலக ஊடகங்கள் மட்டுமல்ல தமிழ் ஊடகங்களும் பெருமுதலாளிகளின் ஆதிக்கத்தில் அகப்பட்டு உலக ஒழுங்கு திசை திருப்பப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் சுயமரியாதை உடைய ஒரு ஊடகம் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். பல ஊடகங்கள் ஜெனிவா என்ற கானல் நீரில் தீர்வு என்ற மீன் பிடிக்க முடியுமென்று தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் உங்கல் சுயமரியாத என்னும் சஞ்சிகை வெளிவருவதையிட்டு தன்மானம் மிக்கவர்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள்.

சஞ்சிகை வெளிவிடுவதற்கு பணச்செலவும் உடலுழைப்பும் மட்டுமல்ல எதிரிகளின் தடைகள் துரோகிகளின் வஞ்சனைகள் போன்றவற்றையும் தாங்கும் நெஞ்சு வலிமையும் தேவைப்படுகின்றது அந்த திறன் சுயமரியாதை வெளியீட்டாளர்களிடமும் ஆசிரியக் குழுவினரிடமும் இருக்கின்றது என நம்புகின்றேன்.

உங்கள் சுயமரியாதைச் சஞ்சிகை பெயருக்கு ஏற்ப விலை போகாமல் வீறு நடை போட எனது வாழ்த்துகள்.

# இந்திரா காந்தி சர்வதேச பாடசாலை
# பெங்களூரு

BRIGHT SOCIETY
For Social, Cultural and Educational Development

ஈழத் தமிழ் இனத்தின் குழந்தைகளுக்காக அமைக்கப்பட்ட, முற்றிலும் இலவசமாக, கல்வி மற்றும் தங்கும் வசதிகளுடன் கூடிய இந்தக் கல்வி நிறுவனம் 1990ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 9ம் திகதி பெங்களூரு, யெலகங்கா என்னும் பகுதியில் நிறுவப்பட்டது.

**Indira Gandhi International Academy** என்னும் பெயர் கொண்ட இந்தப் பாடசாலை கடந்த 26 ஆண்டுகளாக பெங்களூருவில் செயற்பட்டு வந்தது. இதுவரை 5300 க்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் குழந்தைகள் இந்தப்பாடசாலையில் இலவசமாக கல்வி பயின்றுள்ளனர்.



முற்றும் முழுவதும் ஈழத் தமிழ் அகதிக் குழந்தைகளுக்கான இந்தப் பாடசாலையில் இந்தியாவின் தமிழக அகதிகள் முகாம்களில் வாழ்ந்த ஈழத் தமிழர்களின் குழந்தைகளை மட்டுமே தேர்வு செய்து கல்வி புகட்டப்பட்டனர்.

போராட்டம், விடுதலை, பழிவாங்கல், படுகொலைகள் என்று எங்கள் இனம் சீரழிந்து வந்த காலகட்டத்தில் இது போன்ற ஓர் பாடசாலையை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதன் பின்னணியில் எம் இனத்தின் சமூக விழிப்புணர்வு இதற்கு உந்துதலாக அமைந்தது.



ஈழத் தமிழர்கள் அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாத காலம் அது. 1983ஆம் ஆண்டு தமிழகத்தில் முகாம்கள் அமைக்கப்பட்டன. தமிழகத்துக்குச் சென்ற ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையோர் தங்கள் தங்கள் வசதிக்கேற்ப பிற நாடுகளை வந்தடைந்தனர். வசதியற்றோர் முகாம்களில் முடங்கினர்.

தமிழகத்தைத் தாண்டி வந்தவர்கள் எல்லோரும் தங்கள் வாழ்க்கையை பாதுகாத்துக் கொண்டனர். ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் இவர்களுடைய வாழ்வுக்கான

அத்திவாரங்களை தங்கள் நாட்டு மக்களுக்கான உரிமைகளுடன் இணைத்து அமைத்துக் கொடுத்தனர். இதனால் இவர்கள் வாழ்வு பாதுகாப்பானதும் வளமுடையதுமானது.

ஆனால், தமிழக முகாம்களில் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்களின் வாழ்வு இன்று வரை கேள்விக் குறியாகவே உள்ளது. அகதிகள் என்ற அடையாளம் கூட அதிகாரபூர்வமானதாக இல்லை என்பதே உண்மை. மாறி மாறி வரும் தமிழ்நாடு அரசுகள் சில சலுகைகளை அறிவிக்கும், அவை உணவு மற்றும் உப பொருட்களாகவே இருக்கும். உரிமைகள் என்று எதுவும் கிடையாது. கல்வியில், வேலைவாய்ப்பில், சுகாதாரத்தில், வீட்டு வசதியில், மனித உரிமையில் என்று மனிதரின் தேவையில் எவற்றுக்கும் இந்த மக்களுக்கு உரிமை கிடையாது.



10x10 அடி அளவு கொண்ட வீட்டில் 34 ஆண்டுகள் வாழ்க்கை, பொது கழிப்பிடம், பொது குழியலிடம், 300 பேர் முதல் 4500 பேர் கொண்ட 116 முகாம்கள் தமிழகத்தில் இருக்கின்றன. ஈழத் தமிழருடைய வாழ்வு கூவம் போன்று நகரத் தொடங்கியது. இந்தக் காலகட்டத்தில்தான் " **Bright Society** " என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் பெங்களுருவில் மேற்கண்ட பாடசாலையை ஆரம்பித்தனர் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்கள்.

ஈழத் தமிழ் அகதிகளுக்கான தங்கும் விடுதியுடன் கூடிய பாடசாலை ஒன்றினை அமைப்பதற்கு தமிழக அரசிடம் 1990ல் அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்க முடியாது என்று கூறியதன் பின்னர்தான் பெங்களுருவில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கர்நாடகத்தில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. கல்விக் கூடம்தானே அமைத்துக்கொள்ளுங்கள் என்றனர்.

1990 ஆம் ஆண்டு செப்ரம்பரில் இப்பாடசாலையை ஆரம்பிக்கும் போது மொத்தம் 450 ஈழத் தமிழ்க் குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர் அழைத்துச் சென்று இணைத்தனர். இப்பாடசாலை ஆங்கில வழிக் கல்வியைக் கொண்டது. தமிழ் நாடு மற்றும் கர்நாடகா ஆசிரியர்களைக் கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டன.

உணவு, சீருடை, பாடப் புத்தகங்கள், எழுது பொருட்கள், தங்கும் வசதி, உடை, மருத்துவம், விளையாட்டு, இவற்றுடன் ஆங்கில வழிக் கல்வி என்று அனைத்தையும் இந்த 26 ஆண்டுகளாக எங்கள் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வந்தன. ஈழக் குழந்தைகளுக்காக நடத்தப்பட்ட இந்தப் பாடசாலைக்கு ஈழத் தமிழ் அமைப்புகள் எதுவும் எந்தவித நிதியுதவியும் செய்தது கிடையாது.

இரண்டு பேர் மட்டும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தனர். அவர்களில் ஒருவர் டொக்டர். தில்லை நடராஜன் & திருமதி. அனுசா தில்லை நடராஜன் அவர்கள் (இலண்டன்) மற்றவர் திருமதி. ரேஷல் நவநீதம் அவர்கள் (கனடா).



இவர்கள் இருவரும் ஆண்டுக்கு ஒரு தடவை பெங்களூருவுக்குச் சென்று நேரில் பார்த்து தங்களாலான உதவிகளைச் செய்து வந்தனர். அவர்களுக்கு அகதிகள் குழந்தைகள் சார்பாக நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

இந்தப் பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்கள் இன்று பல நாடுகளிலும் பரவி வாழ்கின்றனர். பெரும்பான்மையோர் தமிழகத்திலும், கர்நாடாகா மாநிலத்திலும் பணிபுரிகின்றனர். இந்தப் பாடசாலையில் ஓர் மாணவனை இணைக்கும் போது அவர்களிடம் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் இரண்டு மட்டுமே. ஒன்று - படித்து முடித்ததும் நீங்கள் உங்கள் தாய் தந்தையர் மற்றும் சகோதரர்களை வாழவைக்க வேண்டும். இரண்டாவது – அப்படி முடியவில்லை என்றால் எங்கள் நாட்டுக்காக உழைக்க வேண்டும். இந்த இரண்டில் எதையும் செய்ய முடியாதவர்கள் இன்றே திரும்பிச் சென்று விட வேண்டும் என்ற உறுதி மொழியைப் பெற்றுக் கொண்டுதான் பாடசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அப்படிக் கல்வி கற்றவர்களில் அதிகமானவர்கள் தங்கள் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றி வருகின்றனர். திருமணம் செய்து பலர் தங்கள் குழந்தைகளை மிகவும் சிரமத்தின் மத்தியிலும் கல்வியின் அவசியத்தை உணர்ந்து படிப்பித்து வருகிறார்கள். எங்கள் இனம் நல்ல கல்வியைப் பெற்றிருந்தால் அறிவால் ஈழத்தை வென்றெடுக்கலாம் என்பது எங்கள் கருத்தாக உள்ளது.

இனி இந்தப் பாடசாலையில் படித்த ஈழக் குழந்தைகளின் வாழ்வு எப்படியான சிரமங்களைக் கொண்டவை என்பதைப் பார்ப்போம். வடக்குக் கிழக்கு மாணவர்களில் தமிழரின் வாழ்வு எப்படி அமைந்தது என்பதும், முகாம்களுக்கு வந்த பின்னர் அவர்களுடைய வாழ்வு எவ்விதம் மாறிப்போனது என்பதையும், இவற்றிலிருந்து விடுபட்டு எங்கள் கல்வி நிறுவனத்துக்கு வந்து சேர்ந்ததால் அவர்களின் வாழ்க்கை முறை எப்படி மாறி சிறந்த ஓர் நாகரிகமுடைய சமுதாயமாய் மாறியது என்பதையும் காணலாம்.

அடுத்த இதழில் தொடரும்...

தமிழ் ஈழத்தில் நடக்கும் சமுதாய அவலங்கள் , அரசியல் தலைவர்களின் மக்கள் கடமைகள் பற்றிய கட்டுரைகளுடன், புலம்பெயர் தமிழர்களின் ஆக்கபூர்வமான கட்டுரைகளையும் எதிர்பார்க்கின்றேன்.
உங்கள் முயற்சி வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.



சத்தியசீலன்

# THE ROLE OF THE TEMPLE IN POST WAR SOCIAL AND ECONOMIC DEVELOPMENT

Paper presented by Eelapatheeswarar Aalayam for the
**DIASPORA CONFERENCE**
hosted by the Tamil information Centre
– held on 18 December 2016

## Executive Summary

Eelapatheeswarar Aalayam is a Charity, was established in the UK in 2009. The trust has progressed through formidable challenges over the years and is currently involved in a pioneering and innovative economic development programme involving two combined villages of Pulayaveli and Thambanamveli in the Batticaloa District in Sri Lanka- known as our first Village Development Project (VDP) of our charity.

The VDP is an imaginative initiative, fulfilling the radical potential of realising the socio-cultural-economic-religious goals envisaged from the outset and its outcome hopefully will influence the investment programmes of non-resident Sri Lankans in the post war Sri Lanka. The extent of this stakeholder participatory initiative is a lesson that will help make this imitative far reaching.




Times are ever changing in Sri Lanka. With these changes, we have committed ourselves of doing things differently. Our VDP is an innovation with the vision of becoming a forward looking concept.

In a small way, we on our own are contributing to the UN's 'Transforming our world: the 2030 Agenda for Sustainable Development' and this 'agenda is a plan of action for people, planet and prosperity'.

## The Idea of a model village

The idea of VDP evolved following a prolonged thought process of considering ideas and proposals from well-wishers and our Charity's Board Members. Our thoughts formulated our own idea to undertake sustainable projects on our own for the effective management of our resources and to be accountable.

The idea of VDP's is also to build bridges between divided communities. In that, first step was to build bridges within Tamil-Hindu communities that experienced the adversities of the war in a disproportionate scale.

As an exclusive northern Tamil-Hindu dominated management board, we had to make the bold decision to take our step to extend our hands friendship to the Eastern Tamil Hindu community.

With the support of our donors and unique experience gained from our VDP we envisage extending our hand of friendship to the non-Tamil areas of Sri Lanka in the future.

**Choosing a village for adoption** I undertook a visit to the Eastern Sri Lanka in January 2016 and with the help of my brother Dr R Narendran. We visited three deprived villages recommended by the local Member of Parliament Mr Amal Viyalendran. Our charity or individual members had no connections with the parliamentarian in the past and our engagement was mere co-incidence when the parliamentarian approached us canvassing for support from the Tamil Diaspora groups to initiate educational projects in Batticaloa.

**Key elements of the model village selected** We considered the Pulayaveli and Thambanamveli villages as one unit as they were two neighbouring villages and had demanding needs compared to the other two villages we visited.

The other two villages had comparatively lesser priorities. The main focus of one of them was strengthening its school facilities and helping to deal with the marauding elephants causing harm to properties and their economy. Our

engagement with the third village proved their needs were limited to refurbishing their Hindu temple and to create recreation facilities.

Our engagement with the Pulayaveli and Thambanamveli villagers confirmed their needs were much acute deserving help. What the villagers told us were:

1. There was acute shortage of water resources post Northeast monsoon season. The local authority supply of water in browsers is collected by the people for their cooking and drinking needs. The villagers walk to faraway places to bathe and to wash their clothes. The female folks, appealed to us to find ways to be self-sufficient in water resource needs.

2. The villages on the whole were Hindus and their divine God is Ambal (Luxmi). Their temples Goddess Ambal and Lord Ganapathy were huts and the whole village get-together annually to hold a grand festival within their capacity. The villagers appealed to us to help build temples for them.

3. The men in the villages are the bread winners and mainly labourers. In the wet monsoonal period, they are employed as labourers by the wealthy land owners -known as Podiyars to work in their paddy fields. During dry seasons, they work as fishermen for Mudalalis. There are occasions when they will not have work even as fishermen.

4. The children walk for miles to attend school. There were issues of children keeping away from school due to lack of transport facilities and financial constraints. The children's educational needs are not priority, due to the financial circumstances of the families the children have to attend to the day to day household work with their parents.

5. There is serious issue of suicides and suicidal tendencies due to financial difficulties. Unregulated house to house sale of clothing on credit to purchase clothes by businessmen trading in vehicles and easy access to finance to purchase TV's, motorcycles etc., is having far reaching consequences for the

menial income earners. There are families who dispose significant portion of their income to settle the debts and there also were occasions goods were repossessed by the institutional lenders.

6. The village lands outside the arable fields are extensive scrubs that is eyesore to the villages and can be put to economic use

7. There were victims of the war needing help. Young men and women looked very older due to their abject economic circumstance.

## Managers of Structure of VDP

- Management Board of Eelapatheeswarar Aalayam- Overall management, funding and guidance.
- Voluntary Consultant- Dr R Narendran. Profile: PhD in Animal Husbandry (University of Guelph-Canada); Former lecturer- Veterinary Science, Peradenia University, Sri Lanka; Asst. Prof. King Faisal University, Al-Hasa, Saudi Arabia and Consultant until retirement in a major Agro-Animal Husbandry industry in Saudi Arabia.
- In co-ordination with Pulayaveli Village Board.
- Manager- Responsible for discharging the designated responsibilities of project management under the guidance of the Voluntary Consultant.
- Administrative Assistant- Office administration and assisting the manager in the execution of his responsibilities.
- Village Committees.

## Key elements of making combined model village.

We decided to accelerate the programme of work and categorised the work into three broader areas.

1. Exploration of permanent water resources for the villages. Having considered the pros and cons of dredging local reservoir and deepening

the existing well, we decided to proceed with the plausible option of digging tube wells. Venturing into an area of work without any knowledge of our own was a challenge for us. Our step by step approach to methodically progress through to cost effectively manage the underground exploration of water was a success. Failure in our first step to drill a tube could have had far reaching consequence of even abandoning the project wholesome.



With the help of those who had some experience, a contactor was engaged to dig through 200 feet below, penetrating through hard granite rocks. When the water was hit, it was a momentous occasion for both the villages and us.
From there on we successfully drilled five other tube wells of which one did not give the desired results and was parked at 200ft to review at a later date. Water tanks and extensive pipe network was carried out for the water to benefit the entire villagers.

The exploration of water and the extensive distribution network further strengthened inter dependency of the communities and neighbouring villages too were facilitated with the use of water.

Even the nature's local habitat monkeys are overwhelmed by the emergence of water in the village.

2. Construction of temples was the second cardinal appeal of the villages which mollified with the
objective of our Charity. Without advancing this request in a sectarian religious mind, we decided
correlate it with the economic advancement of the project.

The Pulayaveli village have officially registered committee for the furtherance of their religious work. They also had secured some acres of land from the government where their primitive temples were located. Using this as hub for economic activities we decided proceed with the construction the two Hindu temples.

We managed to put up modern infrastructure for the Pillaiyar temple within a short space of time and devised procedures to generate income from its operations.



*Pillaiyar Temple before*





*Pillaiyar Temple now*

Luxmi temple is a much bigger project. The construction work is under way. As part of the construction, we have planned to build a guest house to be commercially managed by the villagers.






*Amman Temple before*

*Amman Temple under construction*

## 3. Advancing socio-economic projects.

We have established an office for the management of our projects in the village. We have employed two administrative staff with IT facilities to engage in the advancement and management of the VDP.



In order to successfully accomplish our VDP, we acquired three acres of land adjacent to the temple and have secured further 20 acres of government land for the furtherance of our project.



Half an acre of prime land donated to the project on the village road will encompass economic activities. Plans have been drawn and construction for a sewing school, clothing outlet and IT training centre will commence soon and anticipate operational in February 2017.

Assessment undertaken confirms able and talented villagers to engage in the VDP. Village committees have been formed assigning specific roles for the teams. Committees have started functioning and their performance is encouraging.



Further:

- Extensive multipurpose seedlings are taking place for the development of long term industrial projects. We have established long term backing for the marketing of products according to the buyers' specifications.
- Building three units for small scale factories to harness the local resources for exports.
- Two three wheelers donated by a leading business in the UK are to be delivered to improve the transportation and to create employment.
- Establishment of an administrative office, currently employing two staff.
- Have built roadside displays to promote the village to strengthen its economy.
- We have collected clothes, toys and many other items in the UK to send to the village to uplift the standard of living and the economy of the village.

Our plans will extend to cover:

- Development of modern dairy farming, beekeeping industry, construction of guest houses, rest houses and food stalls.
- Establishing small scale industries to process and market local products. We have secured donor investment and support for some of the projects.
- Building common bathroom facilities for the villagers.
- Finding ways to establish a school in the village/s.
- Etc., etc.

தமிழ் iptv tamil.net

# வடமாகாண ஆசிரிய நியமனம்

## செவிடன் காதில் ஊதிய சங்கா..?

தொடர்ச்சியாக வடமாகாணத்தின் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றியும், அவற்றை நிவர்த்தி செய்யக் கூடிய நடைமுறைச் சாத்தியமான, யாழ் மாவட்டம் தவிர்ந்த, ஏனைய பின்தங்கிய மாவட்டங்களின் கல்வித்தரத்தினை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகள் பற்றியும், நாம் பல தடவைகள் பல நிர்வாக, அரசியல் தலைமை மட்டங்களிலும் வலியுறுத்தி வந்த போதிலும் அவை செவிடன் காதில் சங்கு ஊதுவது போலவே அமைகின்றது.

அண்மையில் வட மாகாண ஆசிரிய சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் பற்றி நிறையவே சந்தேகங்கள் பல மட்டத்திலும் ஏற்றபட்ட வண்ணமேயுள்ளது. 2300 விண்ணப்பதாரிகளில் இருந்து பரீட்சைக்கு தோற்றி, பின் பரீட்சை முடிவுகளின்படி, அண்ணளவாக சுமார் 800 பேர் வரையிலான பட்டதாரிகள், ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படவுள்ளனர். அதாவது ஏனையவர்கள் சித்தியடையவில்லை என்று கருத்திலெடுக்கப்படுகின்றது.

வித்தியாசமான பாடவிதானத்துடன், தேவைக்கு மேலான இறுக்கமான, நடைமுறைக்கு பொருத்தமில்லாத பரீட்சை ஒன்றின் மூலம், நான்கு / ஐந்து வருடகல்விக்கு பின்னர், பல்கலைகழகத்தால் பட்டதாரிகள் என அங்கீகரிக்கப்பட்டவர்கள் தொழில் சந்தைக்கு தகுதியற்றவர்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இப் பட்டதாரிகள் தத்தமது பெயருடன் வைத்திருக்கும் சான்றிதழ்களினதும், பல்கலைக்கழக பாடவிதான செயற்பாடுகளினதும் தகுதியையும் தரத்தையும் கேள்விக்குள்ளாக்கும் இச் செயற்பாட்டினது விளைவுகளையும் நோக்கங்களையும் வெளிப்படையாக கூற யாரவது தயாராக உள்ளனரா.?

குறிப்பிட்ட பாடத்தில் கல்விகற்று பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகள், சம்பந்தமில்லாத துறைகள் சார்ந்த கேள்விகளால் பரீட்சிப்பது பொருத்தமான செயற்பாடாக தெரியவில்லை. அதே நேரத்தில் மிகவும் இறுக்கமான பரீட்சை முறைகளின் மூலமும், பொதுவான வெட்டுப்புள்ளி முறைகளின் மூலமும் பின்தங்கிய மாவட்டத்தின் சேவைகளை பூர்த்தியாக்க முடியாத இலக்கு என்பதுமா இவர்களிற்கு புரியாமலுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பக்கூடிய வகையில் வெட்டுப்புள்ளியை தீர்மானிப்பதிலும், சம்பந்தபட்ட மாவட்ட பரீட்சார்த்திகளில் சிறப்பான பரீட்சைமுடிவுகளை வெளிக்காட்டுபவர்களை கொண்டு வெற்றிடங்களை நிரப்பவும் விரும்பாது மாகாண கல்வித்துறை தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றது.

மாவட்ட ரீதியாக வெட்டுபுள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டு. ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தெரிவுசெய்யப்படுபவர்கள்.

01. நீண்ட காலத்திற்கு தனது சேவையை சம்பந்தபட்ட மாவட்டத்திற்கு அளிக்கமுடியும்.
02. இடமாற்றத்திற்கு அக்கறை கொண்டு ஓடித்திரியும் நிலை ஏற்படாது.
03. இடமாற்றப் பிரச்சினைகள் ஓரளவுக்கு கட்டுக்கோப்பான நிலைக்கு வரும்.
04. போக்குவரத்து / பிரயாண நேரமும் செலவும் தவிர்க்கப்படும்
05. சமுகத்துடனான உறவும் மேம்படும்.

நடந்து முடிந்த பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 60% ற்கு மேலானவர்கள் யாழ்குடா நாட்டை சேர்ந்தவர்கள்தான். ஆனால் யாழ் குடாநாட்டில், தீவக பகுதியின் பாடசாலைகளில் தான் கூடுதலாக ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. அதேநேரத்தில் யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதும் வடமாகாண கல்வித்துறையின் வெளிப்படையான இரகசியம் என்பதும் யாவரும் அறிந்த விடயங்கள்தான். இம் மேலதிக ஆசிரியர்களை கொண்டு தீவக ஆசிரியர் தேவைகளை நிரப்பமுடியும் என்பதுவும் சாத்தியமான தீர்வுகளில் ஒன்று ஆகும்.

நியாயமாக பார்த்தால் வன்னி பெருநிலப்பரப்பின் நான்கு மாவட்டங்களிலும்தீர்க்க முடியாத அளவிலேயே ஆசிரியர்கள் பற்றாகுறை நிலவுகின்றது.

உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர்கள் தேவைப்பாடு 128 ஆக இருக்க, சித்தியடைந்த பட்டதாரிகள் 41 என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள வெற்றிடங்கள் வெளி மாவட்ட பட்டதாரிகளினால் நிரப்பபடவுள்ளது. இவ்வாறான நியமனதாரிகள் அதிகஸ்ட பிரதேச நியமனமாக தங்களை கருதுவதால்அவர்களினது எண்ணங்களும் செயற்பாடுகளும்

- ஐந்து வருடகாலத்தை ஓட்டுவதும்
- நியமனங்களை தக்கவைப்பதும்
- தங்கள் மேற்படிப்புகளை மேற்கொள்வற்கான கல்வி விடுமுறைகளை பயன்படுத்துவதும்.

என முனைப்பாக செயற்படுத்தி, இறுதியில் வளம் குறைந்த பிரதேச மாணவர்களை இடைநடுவில் கைவிட்டுவிட்டு செல்வதுமாக இருக்கும்.

கஷ்டபிரதேசங்கள், இவ்வாறான ஆசிரியர் நியமனங்களினால் தொடர்ந்தும் கஷ்ட பிரதேசங்களாகவே வைத்திருப்பதிற்கான நடைமுறைகளை வடக்கு மாகாண கல்வித்துறை கடைப்பிடிக்கின்றமை மிகவும் கவலைக்குரியதும் கண்டனத்திற்குரியதும் ஆகும். எனவேதான் நாம் தொடர்ச்சியாக குறைந்த பட்சம் மாவட்ட அடிப்படையிலான வெட்டுப்புள்ளிகளையும், ஆட்சேர்ப்புகளையும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் வெற்றிடங்களிற்கேற்ப நெறிப்படுத்துமாறு வலியுறுத்தி வருகின்றோம். இருந்தும் எந்தவித பயனும் ஏற்படுவதாக தெரியவில்லை.

அதேவேளை வன்னி பெருநிலபரப்பைச் சேர்ந்த பட்டதாரிகளின் அமைப்புகளும் கூட இவ்வாறான அடிப்படையான, அவசியமான நீண்டகால நன்மைகொண்ட விடயங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் உணர முடியவில்லை. எமக்கும் இவ்விடயத்தில் பல்வேறுபட்ட கேள்விகளும், சந்தேகங்களும் ஏற்பட்டுள்ளது.

- இறுக்கமான பரீட்சை ஒன்றின் மூலம், வெட்டுப்புள்ளி முறையையும், மாவட்ட ஒதுக்கீடு முறைமையும் புறக்கணிக்கப்படுகின்றதா.?
- அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளிற்குபரீட்சைகள் வைப்பதின் மூலம் தரம்பிரிக்கப்படுகின்றார்களா.?
- பரீட்சைக்கான கேள்விகள் தெரிவு செய்யப்பட்டதின் பின்னணி என்ன.?
- தெரிவுபரீட்சையில் சித்தியடையவில்லை என்பதற்காக அவர்கள் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பாடத்திலும் பலவீனமானவர்கள் என்று கருதலாமா.?
- சம்பந்தமான பாடத்தை விடுத்து, வேறு பாடத்தின் கேள்விகளை அதிகமாக்கி நடாத்தப்பட்டபரீட்சை சகல பரீட்சார்த்திகளிற்கும் நியாயமான பொறிமுறை என கருதலாமா.?
- பட்டதாரிகளை உள்வாங்கும் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பது, பல்கலைக்கழக பட்டபடிப்பை கேள்விக்குள்ளாக்கவில்லையா.?

மாவட்ட மட்டத்தில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில், அனைவருக்கும் காலங்காலமாக மேற்கூறப்பட்ட சந்தேகங்கள் தோன்றுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

எனவே.,
தேவைக்கு ஏற்ப அளவிலான பரீட்சார்த்திகள் பங்குபற்றுவதை உறுதிசெய்வதுடன், தேவையில்லாத மாவட்டங்களிற்கு பரீட்சைகளை தவிர்க்கப்படவேண்டும்.

தெரிவுப்பரீட்சைகளை மாவட்ட மட்டத்தில் நடத்தப்படல் வேண்டும். இவற்றின் மூலம் ஐந்து வருடகால சேவை பற்றிய சுற்றுநிரூபத்தை மட்டுப்படுத்தவும், அதிகஷ்ட பிரதேசங்களை இல்லாமற் செய்யவும் முடியும்.

இது போன்ற விடயங்களில் நாம் பின்பற்றக்கூடிய இறுக்கமான நடைமுறைகளே வன்னி பெருநிலப்பரப்பின் நான்கு மாவட்டங்களின் கல்வியினை மேம்படுத்தும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும். தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பயிலுனர்களை உள்வாங்கபடும் போது கடைப்பிடிக்கப்படுகின்ற மாவட்ட வெற்றிடம் பற்றிய தரவுகளின் அடிப்படையிலான நடைமுறைகளை பாடசாலை ஆசிரியர் நியமனங்களிலும் கடைப்பிடிப்பதன் மூலம் நடைமுறை முரண்பாடுகளையும் தவிர்க்க முடியும் என நம்புகின்றோம்.

கல்விச்சேவை என்பது மக்களிற்காகவும் மாணவர்களிற்காகவும் செயற்படுவதை விடுத்து, குறித்த பிரதேச ஆசிரியர்களை மையப்படுத்தியதாக அமையுமாயின், அது தரமான சேவையாக அமைய முடியாது. எனவே யுத்த வடுக்களில் இருந்து மீளுகின்ற சமுதாயத்தின் தேவைகளை முன்னிலைப்படுத்தி தரமான கல்வியை வழங்கும் நல்லெண்ண நோக்குடன் மேற்கூறிய கருத்துக்களையும் உள்வாங்கி செயற்படுமாறு சம்பந்தபட்டவர்களை வினயமுடன் வேண்டுகின்றோம்.

**வன்னி மேம்பாட்டுப் பேரவை.**

# “சுயமரியாதை”

## எமது வரலாற்றின் சாராம்சத்தினை தொடரும் சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும்...



**வி.சிவலிங்கம்**

புலம்பெயர் வாழ் சமூகம் பல்வேறு பிரச்சனைக்குள் சிக்கித் தவிக்கிறது. தாயகத்தில் இடம்பெற்ற அரசியல் மற்றும் ஆயுதப் போராட்ட விளைவுகளால் அங்குள்ள நிலமைகள் எவ்வாறு சறுபட்டு உள்ளனவோ அதே போன்ற நிலை புலம்பெயர் தேசங்களிலும் உள்ளது. அரசியல் என்பது திணிக்கப்பட்ட ஒன்றாக இருந்தமையால் குறிப்பாக தமிழ் அடையாளம் என்பது ஆதிக்கப் பிரிவினரின் ஏற்றுக் கொள்ளப்பட்ட வியாக்கியானமாக இருந்தது. இது புலம்பெயர் தேசங்களிலும் குறிப்பிட்ட அளவு வியாபித்திருந்தது. வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்ற ஊடகங்கள் தமிழ் அடையாளம் என்பது மாறாதது. உயிருக்குச் சமனானது என்ற அளவுக்கு பிரச்சாரங்கள் அமைந்தன. போரின் முடிவின் பின்னர் நிலமைகள் மாறத் தொடங்கியுள்ளன. கடந்தகால விளக்கங்கள் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. பிளவுபட்டுள்ள பிரிவினரிடையே இணக்கத்தை ஏற்படுத்த பல தரப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறான சமூக இணைப்பை மேற்கொள்ளும் இன்னொரு முயற்சியாகவே ‘சுயமரியாதை’ என்ற சஞ்சிகை வெளிவருகிறது.

சுயமரியாதை என்பது ஒரு ஊற்றுப் போன்றது. சமூகத்தின் வாழ்வோடு இணைந்தது. ஒரு வரலாற்றின் சாராம்சத்தினை தொடரும் சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் பண்பைக் கொண்டது. ஒரு மனிதனுக்கு அடையாளமாக சுயமரியாதை காணப்படுகிறது. தனது வம்சாவளியின் உயர்ந்த வரலாற்றின் பிரதிநிதியாக தன்னை அடையாளப்படுத்துவதில் பெருமை கொள்கிறான். இருப்பினும் அவனது அடையாளம் கேள்விக்குட்படும்போது அவனது சுயமரியாதைக்கு என்ன நடக்கிறது? அவன் தாழ்த்தப்படுகிறானா? துரோகியா? அல்லது சுயமரியாதை என்பதற்குப் புதிய விளக்கங்கள், பரிமாணங்கள் கிடைக்கின்றனவா?

தமிழ்ச் சந்ததியினரிடையே தமது பண்டைய வரலாறு குறித்து பெருமிதம் காணப்படுகிறது. இவ் வரலாறு தந்த அடையாளத்தினை இழக்கக்கூடாது என்பதில் உறுதி காணப்படுகிறது. அதுவே தமது சுயமரியாதைக்கான அடையாளம் என்கின்றனர். ஒரு தமிழ்ப் பெண் என்பவள் குடும்பத்தின் சுயமரியாதையைக் காப்பவள். ஒரே கணவனுடன் ஆயுட்காலம் முழுவதும் வாழ்வாள். கணவனைத் தெய்வமாக மதிப்பாள். சேலை அணிந்திருப்பாள் எனப் பலவிதமாக சித்தரித்து அச் சமூகத்தின் சுயமரியாதையின் அடையாளமாக காண்பிப்பர். இதுவே அச்சமூகத்தின் கூட்டு அடையாளமாகவும், சமூக உலகமாகவும் கருதுவர்.

எனவே சுயமரியாதை என்பது ஓர் வரலாற்றின் விழுமியங்களிலிருந்தே அடையாளம் காணப்படுகிறது. இதனால் சமூக உளவியலும் அவ்வாறு கட்டமைக்கப்படுகிறது. அடையாளப்படுத்தல் என்பது இரு விதமாக உணர்த்தப்படுகிறது.

ஒன்று தனி நபர் அடையாளம். மற்றது சமூக அடையாளம். தனி மனிதனின் தனித்துவமான பண்புகளே அவனுக்குரிய தனி அடையாளத்தினை வழங்குகிறது. அவன் ஒரு சமூகத்தின் பிரதிநிதியாக உள்ளபோது அச் சமூகத்தின் அடையாளத்தினையும் பெறுகிறான். இந்த அடையாளங்களை இழக்கும்போது அவன் சுயமரியாதையை இழந்தவனாக அச்சமூகம் கருதுகிறது. அல்லது காண்பிக்கிறது.

சமூக கட்டுமானத்திற்குள் வாழும் ஒரு மனிதன் அதன் அனுபவங்களினாலும், உறவுகளாலும்,ஓர் இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்கிறான். இதனால் அச்சமூகத்தின் வரலாற்றோடு தானும் பயணிப்பதால் அவனுக்கு ஓர் அந்தஸ்து, கௌரவம், வீரியம், சுயமரியாதை கிடைக்கிறது.

இதனை மையமாக வைத்தே புலம்பெயர் தேசங்களிலும் சுயமரியாதையைப் பேணும் உரையாடல்கள் உள்ளன. முற்றிலும் வேறுபட்ட சமூகத்தின் மத்தியில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் கருதும் சுயமரியாதை என்பது என்ன? என்ற கேள்வி எழுகிறது. தமிழன், தமிழ்ச் சமூகம், தமிழ் அடையாளம், சுயமரியாதை என்பன அச் சமூகத்தின் வரலாற்றோடு நிலத்தோடும் இணைந்தது. புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் தமது அடையாளமாக தமிழ் என அடையாளப்படுத்த முடியுமா? அவர்களது சந்ததிகள் பேசும் மொழி, பின்பற்றும் கலாச்சாரம், புகட்டப்படும் வரலாறு தமிழோடு அல்லது தமிழனோடு சம்பந்தப்படவில்லையே. அவ்வாறானால் அடையாளங்கள் மாறும்போது சுயமரியாதையின் அர்த்தமும் மாற வேண்டும் அல்லவா?

புலம்பெயர் சமூகம்,ஓர் கலாச்சார பெயர்வுக்குள் செல்கிறது. உலக மயமாக்கல், மக்களின் இடப்பெயர்வு போன்றவற்றால் பன்மைத்துவ கலாச்சார அனுபவங்களை நாளாந்தம் பெறுகிறது. வன்முறை, மற்றவர்களை வெறுத்தல் அல்லது வெறுப்பேற்றுதல் என்பன நலிவடைகின்றன. அதனால் இதுவரை இறுக்கமாக பின்பற்றப்பட்ட கலாச்சார அம்சங்கள், குணாம்சங்கள் திரவ நிலைக்குச் செல்கின்றன.

சுயமரியாதை,
என்பதன்மூலம் கட்டப்பட்டிருந்த கலாச்சார அடையாளங்கள் சிதைவடைந்து வாழ்க்கை சிக்கல் நிலையை எய்துகிறது. தாயகத்தலிருந்து தூரச் சென்று புகலிடங்களை நிரந்தர தரிப்பிடங்களாக மாற்றும்போது இழப்பு தவிர்க்க முடியாததாகிறது. இந்த இழப்பின் உணர்வுக ள் குடும்பத்திற்குள் வெவ்வேறாக உணரப்படுகின்றன. தாயகத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழும்போது தனிமை, தொடர்ச்சியான ஒதுக்கம், இழந்த உலகத்தின் சிந்தனை போன்றன

பாதிக்கிறது. ஆனால் இது அடுத்த தலைமுறையினர் மத்தியில் இல்லை. தமது இழப்பைச் சரி செய்ய அடுத்த சந்ததியினர் மேல் அவற்றைத் திணிக்கும் போக்கே எமது சிந்தனைக்குரியது.

அடையாளம் என்பது தனித்துவமாக இல்லை. தாயக உணர்வு என்பது பிளவுபட்டதாக உள்ளது. சாதி, சமயம், பிரதேசம் பற்றிய வேறுபாடுகள் மறைகின்றன. பதிலாக புதிய பிரச்சனைகள் எழுகின்றன. நிறம், பெயர், அந்தஸ்து என்பன அந்த இடங்களை நிரப்புகிறது. சிறுவன் பாடசாலை செல்கிறான், அங்கு அவனது பெயர் தவறாக உச்சரிக்கப்படுகிறது. சிறுவர்கள் சிரிக்கிறார்கள், கிண்டலடிக்கிறார்கள். இவை புதிய அடையாளப் பிரச்சனையாக மாறுகிறது. அதனை நிலைநிறுத்த போராடவேண்டி ஏற்படுகிறது. எந்த அடிப்படையில் போராடுவது? தாயகத்து விதிகள் இங்கு சரிப்படுமா? சுயமரியாதையை, அடையாளத்தை நிலைநிறுத்த பன்மைத்துவ அரசியலுக்குப் போகவேண்டியுள்ளது. பன்மைத்துவ ஜனநாயகத்தை வலுப்படுத்தவேண்டி ஏற்படுகிறது. இங்கு சுயமரியாதை என்பதற்குப் புதிய விளக்கம் தேவைப்படுகிறது.

புலம்பெயர் தமிழர்களிடையே நல்லிணக்கத்தினையும், புரிந்துணர்வையும், கூட்டுச் செயற்பாட்டினையும் வளர்ப்பதற்கு நாம் தாயகத்தின் சிந்தனைக் கோட்பாடுகளை முன் வைக்க முடியாது. அடையாளம் என்பதற்கு புலம்பெயர் தேசங்களின் யதார்த்தங்களோடு இணைத்தே உரைக்கப்பட வேண்டும். அதில் நம்பிக்கை ஏற்பட வேண்டும். சுயமரியாதை என்பது பல்லின கலாச்சாரங்களுக்குள் காணப்படும் மனித நேயம், மனித உரிமை, ஏனைய கலாச்சாரங்களை மதித்தல், இழிவுபடுத்தாதிருத்தல் போன்றன உள்வாங்கப்பட வேண்டும்.

புலம்பெயர் தேசங்களில் எம்மால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் வாழும் பண்பாட்டுத் தளத்தின் அனுபவங்களிலிருந்து பெறப்படவேண்டும். அதுவே எமக்கான சுயமரியாதையின் அடையாளமாகும். அதை விடுத்து தாயகத்தின் அரசியல் பிரச்சனைகளின் பின்னணியில் புலம்பெயர் சமூகப் பிரச்சனைகளை அணுகுவது அர்த்தம் அற்றது. எமக்குப் புதிய அணுகுமுறை, புதிய விளக்கம், புதிய பண்பாடு அவசியமாகிறது.

Photos / Design / Print
www.aimstv.net

# சமூகஅளவியல் மெய்யது விளம்பேல்

தமிழ் கிறுக்கன்

புலம்பெயர்ந்து வாழும் நாம் பலதரப்பட்ட சமூக விழுமியங்களில் தெரிந்தும் தெரியாமலும்,அறிந்தும் அறியாமலும், விரும்பியும் விரும்பாமலும் விழுந்து நெகிழ்கின்றோம்அவைகளை இனம்கண்டு அவைகளிலிருந்து மீள்வதற்காக . பலவகையான இடர்கள், மனச்சுமைகள், துன்பங்களை தாங்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இவற்றை பகுதி பகுதியாக அறிந்து அவற்றிலிருந்து மீள வழியமைப்பதே இப் பக்கத்தின் முக்கிய நோக்கமாகும். இவற்றை புரிந்தும் புரியாமல் இருப்பதால் நாம் நமது இன்பமான வாழ்க்கையில் மகிழ்ச்சியை தொலைத்து வருகின்றோம்நமக்கு . கிடைத்த அரிய வாழ்க்கையை சிறிது சிறிதாக இழந்து வருகின்றோம்.

அளவுக்கு மீறிய ஆசைகள், பலத்திற்கு மேலான சுமைகள், ஆழம் என்றும் தெரிந்தும் காலை விடுதல்,அன்பை வெறுத்து பணத்தை தேடுதல், மற்றவரை பார்த்து ஆடம்பரம் மேலோங்கல், சடங்கு வரைமுறை தெரியாமல் சக்திக்கு மீறி செலவு செய்தல். இவற்றில் ஏதோ ஒன்றில் நாம் எல்லோரும் விழுந்துதான் எழும்புகின்றோம்.

விழுந்தபின் புரிதல் அஸ்தனத்தில்"நமஸ்காரம்" எனலாம். எமது வாழ்க்கையில் முக்கியமான தேடல் செல்வம் சேர்த்தல், பணம் வீடு வாகனம் முதல் பகட்டு வாழ்வு வரை எமது வாழ்வின் எச்சங்கள் ஆகின்றன. தேடுதலின் தேவை அளவாக இருந்தால் தேடலின் சுவை இனிதாகும்.

**வாழ்வை ரசிப்போம், வாழ்ந்து முடிப்போம்...**











# 40ல் திருமணங்கள் 40




1977 40 2017

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

நாளைய கனவை நனவாக்கும் நாற்பது

The best preparation for tomorrow
is doing our best today

## 40th Anniversary gift for 40 young couples

Printed @ JR Print Tel: 020 8503 6643